# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 4 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 1**

**JANUARY 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

**0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com**




கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,

கிறிஸ்துவின் சமாதானம் உங்களுக்கும் உண்டாயிருப்பதாக.

கடந்த சில மாதங்களாக ஜாமக்காரனில் எழுதிவந்த **அன்னிய பாஷை** பற்றிய விவரம் அனேக ஆயிரம் விசுவாசிகளுக்கும், பாஸ்டர்மார்களுக்கும் மற்றும் ஊழியக்காரர்களுக்கும் மிகவும் பிரயோஜனமாக இருந்தது என்று அறிந்து தேவனை துதிககிறேன். வேறு எந்த புத்தகத்திலும் எழுதாத பல **புதிய விஷயங்களை,** பல உதாரணங்கள் மூலமாக விளக்கியது மிக தெளிவை உண்டுபண்ணியது. அன்னிய பாஷையை குறித்து எங்களுக்கு ஏற்பட்ட எல்லா சந்தேகங்களுக்கும் விளக்கம் கிடைத்தது, மிக்க நன்றி. உங்களுக்கு கர்த்தர் கொடுத்த **வேத ஞானத்துக்காகவும்,** நாங்கள் வேத வசனத்தில் தெளிவுபெற சரியான உபதேசத்தில் வழி நடத்தப்பட கர்த்தர் எங்களுக்களித்த ஜாமக்காரனுக்காகவும் குறிப்பாக உங்களை எங்களுக்கு **வழிகாட்டியாக** ஏற்பாடு செய்த கர்த்தரை நாங்கள் துதிக்கிறோம் என்று பலர் எழுதிய கடிதத்தின் சுருக்கத்தைதான் இப்போது அப்படியே எடுத்து இங்கு எழுதினேன்.

பரிசுத்தாவியானவரை பற்றியும் அன்னிய பாஷை பற்றியும் இன்னும் ஏராளமான கேள்விகள் வந்திருக்கிறது. வரும் நாட்களில் கொஞ்சம் கொஞ்சமாக

# JANUARY - 2020

அத்தனை கேள்விகளுக்கும் பதில் எழுதுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

- ☐ இந்த ஜாமக்காரன் உங்கள் கைகளில் கிடைக்கும்போது இரண்டு வார பயனமாக மலேசியா சென்று அங்கு ஊழியம் செய்து கொண்டிருப்பேன்.
- ☐ இனி வழக்கம்போல் ஜாமக்காரனில் **கேள்வி – பதில்,** ஆவிக்குறிய செய்திகள், வேத ஆராய்ச்சி செய்திகள் ஆகியவை வெளிவரும்,
- ☐ உண்மை கிறிஸ்தவனுக்கு கிறிஸ்மஸ் பண்டிகை இல்லை என்று எழுதிவிட்டு – ஜாமக்காரன் அட்டைபகுதியில் கிறிஸ்மஸ் – புதுவருட **வாழ்த்துதல்** என்று எழுதியிருப்பது முன்னுக்குபின்முறனாக தோன்றவில்லையா என்று கேட்டிருக்கிறார்கள். **– வாழ்த்து** கூறுவது வேறு, **பண்டிகை கொண்டாடுவது** என்பது வேறு.
- ☐ உங்கள் **ஜெப விண்ணப்பங்கள்** யாவுக்கும் ஜெபம் ஏறெடுக்கிறோம். தொடர்ந்து ஜெபிக்கிறேன்.
- ☐ உங்கள் காணிக்கைகளுக்கு நன்றி,

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் எபபோதும் நிலைத்திருப்பதாக.

Dr. **புஷ்பராஜ்**

BANK ACCOUNT NUMBERS:

Dr. M.G.E. PUSHPARAJ

SALEM -636 005. INDIA

**STATE BANK OF INDIA** (SALEM-1970)

**A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB637- 10764116842

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# தேவன் அமைத்த முதல் குடும்பம்

## கணவன் – மனைவி இணைந்து செயல்படுதல்

*நன்றி* : சத்திய வசனம்

தேவனுடைய மனதிலே உருவாக்கப்பட்ட குடும்பத்தைக் குறித்து சிந்திப்பது நமக்கு நல்லது. தேவன் **குடும்பத்தைத்தான்** முதலாவது சிருஷ்டித்தார். **குடும்பங்களின் மூலமாகத்தான்** இந்த உலகத்திலே **தம்முடைய நோக்கத்தை** நிறைவேற்ற அவர் விரும்பியிருக்கவேண்டும். ஆனால் மனிதன் அதை உடைத்துப்போட்டான் என்று பார்க்கிறோம்.

ஆதியாகமம் 3ம் அதிகாரம் 1-5 வரையுள்ள வசனம்: "தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் (பிசாசான) சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டதிலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளை புசிக்கலாம். ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை குறித்து தேவன் எங்களிடம் பேசும்போது **நீங்கள் சாகாதபடிக்கு** அதைப் **புசிக்கவும்,** அதைத் **தொடவும்** வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி: நீங்கள் **சாகவே சாவதில்லை.** நீங்கள் இதைப் **புசிக்கும்** நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும். நீங்கள் நன்மை தீமை அறிந்து **தேவர்களைப்போல்** இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

இந்த **சந்தர்ப்பம்தான்** பாவம் மனிதனுடைய வாழ்க்கைக்குள் எவ்விதமாக பிரவேசித்தது என்பதைக் காட்டுகிறது. இந்த சோதனை ஏவாளுக்கு வந்தபோது நமக்கு தெரிந்த அளவிலே இந்த பகுதியிலே நம் கற்றுக்கொள்ளுகிற காரியம் என்னவென்றால் **ஏவாள் தனிமையாக** இருக்கிறாள். அந்த இடத்திலே **ஆதாம் இல்லை** என்று பார்க்கிறோம். ஆதாம்-ஏவாள் இரண்டு பேரையும் இவர்கள் **ஒரே மாம்சமாயிருப்பார்கள்.** இரண்டுபேர் **ஒன்றாகவே இணைந்து செயலாற்றுவார்கள்** என்று கூறிதான் தேவன் இவர்களை சிருஷ்டித்தார். ஆனால் இங்கே பிசாசானவன் வந்து ஏவாளை சோதிக்கிற பொழுது **ஏவாள் தனிமையானவளாக** இருக்கிறாள். நீ இதை புசிக்க கூடாது என்று தேவன் சொல்லியிருந்தும். பிசாசானவன் இதை நீ புசிக்கிற நாளிலே சாகப்போவதில்லை என்று தேவன் **சொன்ன காரியத்துக்கு விரோதமாக** அல்லது மாற்றாக அவன் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறான். நீங்கள் **தேவர்களைப்போல்** மாறுவீர்கள் என்று சொன்னபொழுதுதான் **ஏவாள்** அந்த சோதனைக்கு உட்படுவதாக நாம் பார்க்கிறோம்.

இவற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காரியம். **இரண்டு பேராய் சேர்ந்து செயல்படுவதற்காகப் படைக்கப்பட்ட குடும்ப வாழக்கையிலே** தனிப்பட்டவர்களாக நீஙகள் மட்டும் சுயமாக செயல்படக்கூடாது. **தனிப்பட்டவர்களாய் சில தீர்மானங்கள் எடுக்கக்கூடாது.** சில சமயங்களில் பல தீர்மானங்கள் தனியாக எடுக்கக்கூடிய சந்தர்பங்கள் சூழ்நிலைகள் வரலாம். ஆனால் **பெரிய தீர்மானங்கள்** எடுக்கும்போது தனிப்பட்டவர்களாய் எடுக்காதபடிக்கு **ஒருவரோடு ஒருவர்** அதைக்குறித்து பகிர்ந்துகொண்டு இரண்டு பேராக சேர்ந்து **தேவனோடுகூட இணைந்து** தீர்மானங்களை எடுக்கும்போதுதான் தவறு உண்டாகாத சரியான தீர்மானங்களை நீங்கள் எடுக்கமுடியும். தனிப்பட்டவர்களாகவும். சுயமாகவும் எடுக்கும் தீர்மானம் நம்மை தவறான வழிமுறைக்கு நேராக நம்மை வழிநடத்தலாம். அந்த **ஸ்திரீயான ஏவாள்** அந்த கனியைப் பறித்துப் புசித்தது மாத்திரமல்ல பின்பு அதை **கணவனுக்கும்** கொடுத்து **அவனையும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யத் தூண்டுகிறாள்.** அந்த குடும்ப வாழ்கையிலே ஒரு பெரிய பிரச்சனை உருவாக ஆரம்பித்துவிடுகிறது.

3வது அதிகாரம் 12வது வசனத்திலே தேவன் ஆதாமிடத்திலே வந்து ஆதாமே. நீ ஏன் அதைச் செய்தாய்? என்று கேட்டபொழுது ஆதாம் சொன்ன பதில் என்ன தெரியுமா? "நீர் என்னோடுகூட இருக்கும்படியாக **நீர் கொடுத்த இந்த ஸ்திரீயானவள்** அதை எனக்கு கொடுத்தாள்: அதை நான் புசித்தேன் என்றான்" என்று சில நாட்களுக்கு முன்பாக அவன் பாடிய பாடல்: நீ என் எலும்பில் எலும்பும். மாம்சத்தில் மாம்சமுமானவள் என்று பாடினான். ஆனால் இப்பொழுது அவன் சொல்லுகிறான். **"நீர் எனக்கு கொடுத்த இந்த ஸ்திரீயானவள்"** என்று குறிப்பிடுகிறான். அச்சமயத்தில் **ஏவாளை தனது மனைவி** என்று சொல்லக்கூட அவன் ஆயத்தமாயிருக்கவில்லை. **இந்த ஸ்திரீ** என்று சொல்லுகிறான். அதிலிருந்து நாம் பார்க்கிற காரியம் என்னவென்றால். அந்த குடும்ப வாழ்க்கையிலே **ஒரு சிறிய உடைசல்.** ஒரு சிறிய **விரிசல்** அங்கே ஏற்பட்டுவிடுகிறது. தன் மனைவியை புதிதாக இணைக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் எப்படியெல்லாம் செல்ல பெயரிட்டு அழைத்து கொஞ்ஜியிருப்பான். ஆனால் குடும்பத்தில் விரிசல் ஏற்பட்ட உடன் மனைவியின் பெயரை சொல்லக்கூட விரும்பவில்லை.

தேவனாலே சிருஷ்டிக்கப்பட்ட குடும்பத்தை இப்படித்தான் பிசாசானவன் **உடைக்க ஆரம்பிக்கிறான். குடும்பத்தை** உடைப்பது **கணவன் மனைவியை** பிரிப்பது **பிசாசுக்கு பிரியம்.** அது எப்படி நடந்தது? ஏவாள் **தனிமையாக** இருக்கும் போது ஏவாள் சுயமாக தீர்மானத்தை எடுத்ததுதான் இதற்குக் காரணம் என்பதை ஓரளவிற்கு நாம் அறிந்துகொள்ள முடிகிறது. தனியாக இருக்கும்போது கணவனோ அல்லது மனைவியோ **தனிப்பட்ட முறையில்** எடுக்கிற எந்த தீர்மாணங்களும், பல வேளைகளிலே தவறான தீர்மானங்களாக மாறிவிடும். ஆகவேதான்

நீங்கள் **ஒருவராய் இருக்கவேண்டும்** என்று தேவன் சொன்னார் அதாவது கணவன் - மனைவி ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு இரண்டுபேரும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை நாம் இங்கே பார்க்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் தேவன் நமக்கு கொடுத்த பலவிதமான கற்பனைகளிலே ஒன்று தீமோத்தேயுக்கு பவுல் அப்போஸ்தலன் எழுதின 2 நிரூபம் 3வது அதிகாரத்திலே வாசிக்கலாம். **கடைசி நாட்களில்** நடக்கிற காரியங்களைக் குறித்து அதில் நாம் வாசிக்கிறோம். முதல் சில வசனங்களை வாசிப்பீர்கள் என்றால் **மனுஷர்கள் தற்பிரியர்களாய்** இருப்பார்கள். **பணப்பிரியர்களாய்** இருப்பார்கள் **வீம்புக்காரராய்** இருப்பார்கள். **அகந்தையுள்ளவர்களாய்** இருப்பார்கள். இப்படி பல காரியங்களையெல்லாம் சொல்லிவிட்டு இன்னொரு காரியத்தை 7வது வசனத்தில் சொல்லுகிறார். **எப்போது கற்றாலும் சத்தியத்தை அறிந்தும் ஒருபோதும் உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய** வீடுகளிலே **இப்படிப்பட்டவர்கள் நுழைந்து** அவர்களை **வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று எழுதுகிறார்.** இதை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த **செய்தியை** வாசித்துக்கொண்டிருக்கிற நமக்கு இது ஒரு **பெரிய எச்சரிப்பாய்** இருக்கிறது. கடைசி நாட்களில் ஒரு சில மக்கள் **நம் வீடுதேடி வருவார்கள்** அவர்கள் **எப்போது கற்றாலும்** எத்தனை பிரசங்கம் கேட்டாலும் எத்தனைமுறை வேதம் வாசித்தாலும் ஒருபோதும் சத்தியத்தை அறியாத அந்த விதமான பலவீனமான மக்களை அதாவது பெண்களை முதலில் வஞ்சித்துவிடுவார்கள். அவர்கள் எப்படி வஞ்சிப்பார்களாம்? அவர்கள் அப்படிப்பட்ட **பெண்பிள்ளைகளுடைய வீடுகளிலே** நுழைந்து அவர்களை **வசப்படுத்திக்கொள்வார்கள்** என்று குறிப்பிடுகிறார். நீங்கள் **தனிமையாக இருக்கும்போது** அவர்கள் வருவார்கள். **தனியாக இருக்கும்போது** உங்களுக்காக **ஜெபித்துவிட்டு போக வந்தோம்** என்பார்கள். தனியாக இருக்கும்போது **சில கள்ள பிரசங்கங்களைக் வேதத்திற்கு மாறான கருத்துக்களை உங்களுக்கு போதிக்க ஆரம்பிப்பார்கள்.** பல வேளைகளிலே **தனிமையாக இருக்கிற பெண்கள்** இப்படிப்பட்ட காரியங்களைக்கேட்டு வஞ்ஜிக்கப்பட்டு தங்களுடைய வாழ்க்கையிலே **தவறான** தீர்மானங்களைச் செய்துவிடுகிறார்கள். இன்றைக்கு அநேக குடும்பங்களிலே இவ்வாறு நடைபெறுகிறது. இதினால் குடும்பங்கள் **உடைந்துவிடுகிறது.** சபைகளும் **உடைந்துவிடுகிறது.**

**மனைவி ஒரு சபைக்கு** போய்கொண்டிருப்பாள். **கணவன் இன்னொரு சபைக்கு** போய்க்கொண்டிருப்பான். **பிள்ளைகள் எந்த சபைக்கு போவதென்று** தெரியாமல் **அவர்கள் தங்கள் நண்பர்களுடன் தெருமுனைகளிலே** போய் நின்று கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறவதற்கு முன் ஜெபித்து எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். எனவே நீங்கள் தனிமையாக இருக்கும்போது இப்படிப்பட்ட வஞ்சனையான காரியங்களில்

ஈடுபடக்கூடாது. அதற்கு **இடம்கொடுக்கவும்** கூடாது. அப்படிப்பட்ட கிருபையையும், பாதுக்காப்பையும் ஞானத்தை உங்களுக்கு தேவன்தான் கொடுக்கவேண்டும். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? கணவன் - மனைவி ஒருவரோடு ஒருவர் **பகிர்ந்து கொள்ளவேண்டும். பேச வேண்டும்.** இணைந்து ஜெபிக்கவேண்டும். இரண்டு பேரும் இணைந்து தேவனுடைய சித்தத்தை அறிந்து செயல்படவேண்டும். அப்படிப்பட்ட குடும்பத்தில்தான் தேவன் கொடுக்கும் ஆசீர்வாதத்தை நீங்கள் காணமுடியும்.

ஆக தேவ பிள்ளைகளகளாகிய நம்முடைய குடும்பத்திலே நாம் செய்கிற எல்லா காரியங்களையும் **ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு** இணைந்து தீர்மானங்களைச் செய்யவேண்டும். தனிப்பட்ட முறையிலே நாம் தீர்ாமானங்களை எடுக்கும் போதும் செயல்படும்போதும் பிசாசானவன் பல விதங்களிலே சோதனையைக் கொண்டுவந்து நம்முடைய வாழ்க்கையை சீரழித்துவிடுகிறான். பல குடும்கங்களில் என் கணவருக்கு ஒன்றும் தெரியாது. அவர் உயர்ந்த உத்தியோகஸ்தர்தான் ஆனாலும் நான்தான் வீட்டில் எல்லாம் தீர்மானிப்பேன். எனக்கு எல்லாம் தெரியும் என்ற பெருமை, கணவனை அலட்சியப்படுத்துவது இவைகனளை சில வீட்டில் காணலாம். இது இந்த நாட்களிலே நடந்துகொண்டிருக்கிறது.

**கணவர்களாகிய** நீங்கள் **மனைவிகளாகிய** நீங்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு ஒருமனப்பாட்டுடன் இந்த காரியங்களிலே ஈடுபட வேண்டும். உதாரணமாக நியாயாதிபதிகளின் புத்தகம் 13ஆம் அதிகாரத்திலே நாம் சிம்சோன் பிறப்பதை **கர்த்தருடைய தூதன் அவன் பெற்றோருக்கு தரிசனமாகி சொன்னதைப்பற்றி 3ம் வசனத்திலே வாசிக்கிறோம். கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்தரீக்குத் அதாவது சிம்சோனை பெற்ற தாய்க்கு தரிசனமாகி, அவளை நோக்கி இதோ பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் . ஆதலால் நீ திராட்ரசமும் மது பானமும் குடியாதபடிக்கும். தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப்பெறுவாய்** என்று சொல்லி அதற்கு நில்லாமல் சிம்சோனைப் பற்றி சில காரியங்களையும் **சிம்சோனின் தாய்க்கு** தேவன் தனியாக வெளிப்படுத்துகிறார்.

ஆனால் நாம் 6ம் வனத்திலே வாசிக்கும்போது. **அப்பொழுது அந்த ஸ்திரீ தன்னுடைய புருஷனிடத்திலே வந்து: இன்று தேவனுடைய மனுஷன் ஒருவன் என்னிடத்தில் வந்தார். அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல் மகா பயங்கரமாயிருந்தது. அதனால் எங்கேயிருந்து வந்தீர் என்று நான் அவரிடத்தில் கேட்கவில்லை. அவரும் தம்முடைய நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை என்று அவள் சொன்னாள்.** மேலும் **நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்** என்று அவர் சொன்னதை அப்படியே தன் கணவனிடம் சொல்கிறாள்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிற ஒரு பாடம் என்னவென்றால் மனைவிக்கு தேவதூதன் இந்த காரியத்தை வெளிப்படுத்தினபோது அவள் ஓடிப்போய் தன்னுடைய **கணவனாகிய மனோவாவினிடத்திலே** அதைக் குறித்து அவள் அறிவிக்கிறாள் என்று பார்க்கிறோம். **இரண்டுபேருமாக இணைந்து தேவனுடைய நோக்கம்** என்னவென்பதைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசையின் அடிப்படையிலேதான்

தேவதூதன் **மறுபடியுமாக** மனோவாவின் முன **தோன்றி** அவள் கணவனாகிய மனோவாவினிடத்திலே அதைக்குறித்து அவர் பேசுகிறார். ஆகவே மனோவாவும் அவனுடைய மனைவியும் **ஒருவருக்கொருவர் இணைந்து** காரியங்களை பகிர்ந்துகொண்டதை நாம் இங்கு பார்க்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, ஒருவேளை தேவ தூதர்களேகூட உங்களிடத்தில் வந்து ஒருசில காரியங்களை பகிர்ந்துகொண்டாலும் அதை உடனடியாகவே தேவனை விசுவாசிக்கிற உங்கள் **துணைவியோடு** அல்லது **துணைவரோடு** பகிர்ந்துகொண்டு நீங்கள் ஆலோசனை பண்ணி **தீர்மானங்களை** எடுக்கும்போது தான் அதில் **தெளிவான தீர்மானங்களை** நீங்கள் செய்ய முடியும். மனோவாவும் அவனுடைய மனைவியும் அதற்கு ஒரு நல்ல மாதிரியாக வேதத்திலே நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட ஒரு அருமையான ஒற்றுமையாக செயல்பட்ட குடும்பத்திலிருந்து உருவாகி வந்த **சிம்சோனுடைய** வாழ்விலே காணப்பட்ட ஒரு பிரச்சனை என்னவென்றால். அவனது குடும்பத்தோடு சிம்சோனுக்கு ஒரு சரியான தொடர்பில்லை. **இஷ்டம்போல் சுற்றுகிறவனாக இருந்தான். அதனால்தான் அவன் என் வாழ்க்கை என் இஷ்டப்படி** நான் செய்வேன் என்று அவன் காரியங்களை செய்ய ஆரம்பிக்கிறான்.

சில நல்ல ஊரியர்களுடைய குடும்பங்களிலே பெற்றொர் தெய்வ பயம் உள்ளவர்களாக இருக்கலாம். தெய்வ சப்தம் வசனம் மூலம் கேட்டு அதன்படி வாழ்பவர்களாக இருக்கலாம். ஆனால் ஊழியம் ஊழியம் என்று சில ஊழியர்கள் அலைந்து அல்லது சபை விஷயங்களில் அலைந்து தங்கள் பிள்ளைகள் பள்ளிகூடத்திலிருந்து அல்லது கல்லூரியிலிருந்து எத்தனை மணிக்கு வீடு திரும்புகிறார்கள், பிள்ளைகளின் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள். அவர்கள் மொபைலில் யாரோடு அதிகம் தொடர்பு வைத்திருக்கிறார்கள் என்பதை கவனிப்பதில்லை. அவர்கள் மொபைலை வாங்கி அதை பார்க்க சில பெற்றொர்கள் பயப்படுகிறார்கள். பிள்ளைகளின் சுதந்திரம் பரிபோய்விடும். பிள்ளைகளை நாங்கள் மிகவும் நம்புகிறோம், வாலிப பிள்ளைகளின் சுதந்திரத்தில் நாங்கள் தலையிடுவது பிள்ளைகளின் வெறுப்புக்குள்ளாவோம் என்றெல்லாம் கூறிய பெற்றோர் இன்று பிள்ளைகளை இழந்து கண்ணீர்விட்டு தனிமையில் கணவனும் மனைவியும் மட்டும் பிள்ளைகளை பற்றிய ஏக்கத்தோடுதிருப்பதை என் 80 வருட அனுபவத்தில் பல குடும்பங்களை கண்டிருக்கிறேன். பிள்ளைகளின் கல்லூரி சென்று 3 மாதத்திற்கு ஒரு முறையாவது பிள்ளைகளைப்பற்றி விசாரிக்க பயப்படுகிறார்கள். பிள்ளைகள் தங்கும் விடுதிகளில் நேரில் சென்று விசாரித்து பெற்றோர் அல்லது கார்டியனை தவிர யாரெல்லாம் பிள்ளையை பார்க்க வருகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டாமா? அளவுக்கு அதிகமாக உங்கள் பிள்ளைகளை நம்பாதீர்கள் இந்த உலகம் பிசாசின்பிடியில் இருக்கிறது.

படுக்கையில், குளிக்கும் அறையில் கைபேசியை எடுத்துசெல்ல அனுமதிக்க வேண்டாம். அவசர செய்தியானாலும் வீட்டில் உள்ள வரை அவர்கள் உங்கள் பார்வையில்தான் கைபேசியில் பேச வேண்டும். ஏலி என்ற ஊழியன் தன் பிள்ளைகளை அடக்காமல் போன பாவமத்தினால் நான் (அந்த ஊழியன் ஏலி) குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாய தீர்ப்பை செய்வேன் என்று கர்த்தர் கூறினார். 1 சாமு 3:13 எவ்வளவு பயங்கரம் பாருங்கள். பிள்ளைகள் தவறை கண்டிக்காதது பெற்றோரின் பாவம் என்று வேதம் எச்சரிக்கிறது.

சிம்சோன் குடும்பத்திலும் இதுதான் நடந்தது. மகன் சிம்சோன் கர்த்தர் வெறுக்கும் ஊருக்கு சுற்றபோனான். கர்த்தர் வெறுக்கும் விக்கிரகத்தை ஆராதிக்கும் பெண்ணை விரும்பினான். அது என் இஷ்டம் என்றான். இந்த இடத்தில் சரித்திர புத்தகம் என்ன சொல்கிறது. சிம்சோனின் பெற்றோர் அவனை கண்டித்து திருத்த முயற்சிக்கவில்லை.

ஆனால் பெற்றோர் அதை **கண்டித்ததாக காணப்படவில்லை.** அதைக்குறித்து நியாதிபதிகள் 14ஆம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். **சிம்சோன் திம்னாத்துக்குப்போய், திம்னாத்திலே கர்த்தர் வெருக்கும் விக்கிரக ஆராதனை செய்யும் கூட்டமான பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒருபெண்ணை கண்டு திரும்ப வந்து தன் தாயையும் தகப்பனையும் நோக்கி. தீம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணை கண்டேன்: அவளை எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்** (வச.1:2)

சிம்சோனுடைய வாழ்க்கையின் பிடிவாதம் என்ன? **நான் கண்டேன். நான் விரும்புகிறேன்** எனக்கு அது வேண்டும் என்பதாகும் உங்கள் பெற்றோரின் ஆலோசனை எனக்கு தேவையில்லை. எங்களை சுதந்திரமாக இருக்கவிடுங்கள். **இதுதானே இன்றைய அநேக வாலிபருடைய** வாழ்க்கையில் காணப்படும் பிடிவாத கொள்கை. **நான் கண்டேன்** எனக்கு **அது விருப்பமாய் இருக்கிறது**! ஆகவே **எனக்கு அது வேண்டும்.** அவளை நான் கொள்ள வேண்டும் !

அதாவது **திருமணம்** செய்ய வேண்டும் என்கிறான். பெற்றோரை பெண் பார்க்க அழைக்கிறான். இதில் ஆவிக்குரிய **இந்த பெற்றோர் செய்யதவறு** என்ன? இவர்கள் இருவரும் கர்த்தரை நன்றாக **அறிந்த பெற்றோர்.** கடவுளோடு **நெருங்கிய தொடர்பு** கொண்டவர்கள தான். மகன் பிரசவிக்கும்முன்பே கர்த்தரின் ஊழியத்துக்கு கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவன் என்று அறிந்தும் கர்த்தர் **வெருக்கும் விக்கிரக ஆராதனைகாரர்** வாழும் ஊருக்கு அவன் **போகும்போதே** பெற்றோர் **எச்சரித்திருக்க வேண்டாமா?** மட்டுமல்ல அங்கு பெண்ணை கண்டேன் திருமணம் செய்துவைக்க **என்னோடு அந்த ஊருக்கு** வாருங்கள் என்று மகன் பெற்றோரை அழைத்தபோதே, வேண்டாம் மகனே! **கர்த்தர் வெருக்கும்** அப்படிப்பட்ட குடும்ப உறவு **உனக்கு வேண்டாம**! மேலும் **அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட**

**கூடாது** என்பது **கர்த்தருடைய கட்டளை.** விசுவாசிகள் **விசுவாசிகளோடுதான்** இணைக்கப்படவேண்டும். என்று கூறி பெற்றோர்கள் அவனை தடுத்திருக்கலாமே!.

இயேசு கூறினார், ஒருவன் தன் **மகனையோ - மகளையோ.** பெற்றோரையோ என்னைவிட அதிகம் நேசிப்பவன் **எனக்கு பிரயோஜனமானவனல்ல** என்றார். (மத். 10:37) அதாவது கடவுளைவிட யாரையும் அதிகமாக நேசிக்கக்கூடாது. **கர்த்தருக்குத்தான்** முதலிடம் கொடுக்கவேண்டும் என்பதுதான் அதன் அர்த்தமாகும்.

இங்கு பெற்றோர் மகனை அதிகம் நேசித்தார்கள். மகனின் **தவறான ஆசையை** நிறைவேற்ற பெற்றோரும் இணங்கினார்கள். **கர்த்தரின்ஆலோசனையை மகன்மேல் உள்ள பாசத்தால் அலட்சியப்படுத்திவிட்டனர்.** இன்றைய பெற்றோர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும்.

மகனோ - மகளோ சாட்சியில்லாத உடல் தோலில் ஒட்டின மாதிரி **லெகினன்ஸ்** போன்ற உடைகள், **தலைமுடியை** முள்ளம் பன்றியை போல் வளர்த்தல் இப்படி பல சாட்சியில்லாத அலங்காரங்களை விரும்பும் பிள்ளைகளின் ஆசைகளை மகனுக்காக, மகளுக்காக நிறைவேற்றி மகனையும, மகளையும் இழந்து தவிக்கிறார்கள்.

## திருமணம் அவன் இஷ்டப்படி நடந்து முடிந்தது

☐ இவ்விதமாக **அவன் தீர்மானித்தபடியே திருமணம் நடக்கிறது.** நடந்தபிறகு அநேக நாட்களுக்கு பிறகு ஒரு நாள் அவன் திரும்ப மனைவின் வீட்டுக்கு வந்தபொழுது அந்த பெண்ணை அவனுடைய மாமனார் சிம்சோனின் தோழரின் **சிநேகிதனுக்கு** மறுமணம் செய்து கொடுத்து விடுகிறார். இப்பொழுது அந் பெண் வீட்டார் என்ன சொல்லுகிறார்கள்! நீண்ட நாள் அவளை பார்க்க வராததால் நீ **அவளை வெறுத்தாய்** என்று நாங்கள் எண்ணி உன் மனைவியை வேறொருவனுக்கு கொடுத்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள்.

அப்படியென்றால் இங்கு நாம் எதைப் பார்க்கிறோம்? **சிம்சோனுடைய வாழ்கையிலே சிம்சோனுக்கும் அவனுடைய மனைவிக்கும் சரியான தொடர்பு இல்லை.** என்பது நன்றாக விளங்குகிறது. நான் கண்டேன். அவளை விரும்புகிறேன். எனக்கு அவள் வேண்டும் என்ற அவன் ஆசைப்பட்ட திருமண ஏற்பாடு ஒரே நாளில் நடந்த சம்பவம். அதன்பின் நடந்த சம்பவங்களால் மற்றவர்கள் அவனைப் பார்த்து சொல்லுகிறார்கள. **நீ அவளை வெறுத்தாய்** என்று நாங்கள் நினைத்துக்கொண்டோம். என்கிறார்கள். ஏன் அவ்விதமாக எண்ணினார்கள்? ஒரு காரணமும் இல்லாமல் அப்படி எண்ணியிருக்கமுடியாது. பல காலம் தன் மனைவியை காண சிம்சோன் வரவில்லை என்றுதான் நாம் எண்ணவேண்டியுள்ளது. அவன் இஷ்டப்பட்ட மனைவி கிடைத்தது, **சரீர சந்தோஷம்** அனுபவித்தான். ஆனால் குடும்ப வாழ்க்கை வாழ விரும்பவில்லை. அதன்பின் சரீர சந்தோஷத்தில் **சலிப்பு** ஏற்பட்டபின் **மனைவியோடு தொடர்பு**

**கொள்வதை** நிறுத்திவிட்டான். அதனால்தான் அவன் மாமனார் நீ அவளை வெறுத்துவிட்டாய் என்று எண்ணிவிட்டோம் என்றார்கள்.

ஆகவே நம்முடைய வாழ்க்கையிலும் **நான் கண்டேன்.** எனக்கு **அவள் வேண்டும்** என்று சொல்லி **கண்டதே காட்சி கொண்டதே கோலம்** என்ற அடிப்படையிலே திருமணத்தை நாம் அவசர அவசரமாய் நியமிக்கக்கூடாது. **தேவனுடைய சித்தத்தை** நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே நாம் வாசிக்கவேண்டிய ஒரு வசனம்: இது தேவனாலே **அனுமதிக்கப்பட்ட** ஒரு காரியம் (ஆனால் **தேவன் இஷ்டப்பட்ட** காரியம் அல்ல) என்பதை அவனுடைய தகப்பனும் தாயும் அறியாமலிருந்தார்கள் என்று பாரக்கிறோம். அப்படியானால் சிலர் சொல்லுவார்கள். இந்த பெலிஸ்திய ஸ்திரீயை அவன் திருமணம் பண்ணியது தேவனுடைய சித்தம் இல்லையா? பின்னே ஏன் கர்த்தர் அவனை தடுக்கவில்லை என்று கேட்பார்கள்! நாம் **நம்முடைய விருப்பப்படி** நான் கண்டேன் **எனக்கு** அவள்தான் வேண்டும் என்று சொல்லி என் இச்சையின்படியும் **என்னுடைய ஆசையின்படியும் தேவனுக்கு விரோதமாக** நான் காரியங்களைச் செய்தால் தேவன் என்ன சொல்லுவார்:

**உன் இஷ்டப்படி நான் உன்னை விட்டுவிடுகிறேன்.** ஏனென்றால் நீ **இயந்திரமல்ல. நீ மனிதன்:** இந்த விஷயத்தில் கர்த்தாவே உம் சித்தம் என்ன ? என்று கேட்டு செய்திருந்தால் இவ்வளவு பிரச்சனை உண்டாயிருக்காது. இப்போது நீயாக தீர்மாணம் செய்துகொண்டாய். ஆகவே உன்னை நான் இயந்திரம்போல் இயக்கமாட்டேன். **உன்னுடைய விருப்பப்படியே** விட்டுவிடுகிறேன். இதைத்தான் தேவன் மனுஷனுக்கு கொடுத்த (Free Will) சுதந்திரம் என்பதாகும். நல்லதை நீ எடுத்தால் நல்லதை அனுபவிப்பாய் **கெட்டதை நீ தெரிந்தெடுக்கும்போது** நான் அதை தடுக்கமாட்டேன். முன்பே **என் சித்தத்தை** உனக்கு அறிவித்துவிடடேன். நீயோ அதை உதாசினப்படுத்தினாய் என்றாலும் நான் அதை வாய்க்கச் செய்வேன். ஆனால் **அதன்பின்** வரும் விளைவுகளை நீதான் **அனுபவிக்கவேண்டும்.** அது **என்குற்றமல்ல** என்பார். ஆனால் அதே சமயம் **இந்த சம்பவத்தின் மூலம் என்னுடைய நோக்கத்தை** நான் நிறைவேற்றியே தீருவேன். **தேவனை நாம் மாற்ற முடியாது.** அந்த **அர்த்தத்தில்தான்** இதைப் பாரக்க வேண்டும்.

ஆங்கிலத்திலே இதைக் குறித்து சொல்லுவோமென்றால் **It was not a Perfect will of God: It was permissive will of God.** சிம்சோன் தெரிந்தெடுத்தது் சிம்சோனுடைய வாழ்வில் **தேவன் தன் நோக்கத்தோடு வைத்திருந்த** பரிபூரணமான **சித்தம் அல்ல.** ஆனால் அதற்கு பெயர் **தேவன் அனுமதித்த** ஒரு சித்தமாகும். அப்படியென்றால் என்ன அர்த்தம் அவனை மனிதனாக படைத்தபடியினால் **உன் இஷ்டப்படி** நீ செய்ய விரும்புகிறாய! செய்துவிடு! அதனுடைய **பலனை நீ அறுக்கப்போகிறாய்.** ஆனால் இதில் நான் ஏற்கனவே சிம்சோன் மூலம்

நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை நான் நிறைவேற்றுவேன். **பெலிஸ்தியர்** கையிலிருந்து தன் **மக்களை விடுவிப்பதற்கு நான் இந்த சம்பவத்தை** பயன்படுத்துவேன் என்று தேவன் சொல்லுகிறார். அந்த அர்த்தத்தில்தான் அந்த வேதவசனத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆனால் **சிம்சோனுடைய வாழ்கையிலே** மனைவியை அவன் வெறுத்தான் என்பதைதான் மற்றவர்கள் கண்டார்கள். சிம்சோனை வெளியரங்கமாய் நீங்கள் பார்ப்பீர்கள் என்று சொன்னால் ஒரு பெரிய **தேவனுடைய மனுஷனான** சிம்சோனைக் குறித்து நாம் வேதத்திலே அடிக்கடி வாசிக்கிற காரியம். அவன் (சிம்சோன்) **அங்கே போனான். தேவனுடைய** ஆவியானவர் **அவன்மேல் இறங்கினார். வல்லமையான காரியங்களைச் செய்தான்.** அவன் **இங்கே போனான். தேவனுடைய ஆவியானவர்** அவன்மேல் இறங்கினார். அங்கே அவன் வல்லமையான காரியங்களைச் செய்தான். என்பதாக காண்கிறோம். ஆனால் இரண்டிற்கும் இடைப்பட்ட காலங்களிலே அங்கே போய் **ஒரு பெண்ணைக்கண்டு. அவன் ஒரு வேசியைக்கண்டு என்றும் வாசிக்கிறோம். அவன் ஒரு வேசி என்று அறிந்தே அவளை விரும்புகிறான். ஆக அவன் வாழ்க்கையிலே பரிசுத்தமில்லை. குடும்ப வாழக்கையிலே தூய்மையில்லை. ஆனால் ஊழியத்தில் வெளியரங்கமாக வல்லமையான** காரியம். ஆனால் **உள்ளான வாழ்விலே தூய்மையில்லையே**! அதனாதான் அந்தக் குடும்பத்திலே பிரச்சனைகள் வந்துவிடுகிறது.

இப்படிப்பட்ட ஸ்டார் ஊழியர்கள் எத்தனையே நபர்களை பார்க்கிறோம். எத்தனையோ பிஷப்மார்கள், ஆயர்களை பார்க்கிறோம். இவர்கள் பரிசுத்தத்தை பிரசங்கிப்பார்கள். ஆனால் வாழ்க்கையில் பரிசுத்தமில்லை.

☐ உங்களுடைய வாழக்கையிலே தேவனுடைய சித்தத்தை அறிந்து நீங்கள் செயல்பட வேண்டுமென்றால் **ஒருவரோடொருவர் இணைந்து செயல்படுங்கள்.** ஒருவரோடு ஒருவர் இணைந்து **பகிர்ந்துகொள்ளுங்கள்.** மற்றவர்களை வெறுக்காதபடிக்கு தேவனுடைய சித்தத்தை மட்டும் நிறைவேற்றுவதற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். எல்லாவற்றையும் சிந்தித்து செயல்படகூடிய பாக்கியத்தை தன்மையை ஞானத்தை கர்த்தர் கொடுக்கும் படியாக ஜெபியுங்கள்.

**ஜாமக்காரன் குறிப்பு : -**

**வாலிபப் பிள்ளைகளுக்கு** இந்த செய்தி பிரயோஜனப்படும். பிள்ளைகளைப்பெற்ற **ஆவிக்குரிய பெற்றோர்** அல்லது **ஊழியக்காரர்களுக்கும்** இதில் நல்ல செய்தியும் ஆலோசனையும் உண்டு. உங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான செல்லம் கொடுக்காதீர்கள். அன்போடும் கண்டிப்போடும் வளர்த்துங்கள்.

# குணமாக்குதலும் விசுவாச ஜெபமும்

Dr. தியோடர் எச். எப்.

**"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக:** அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி **அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்** அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் **பிணியாளியை இரட்சிக்கும்.** கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ் செய்தவனானால் **அது அவனுக்கு மன்னிக்கப்படும்.** நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்கொருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக். 5:14-16)

இந்த **மூன்று வசனங்களிலும்** சில முக்கியமான சத்தியங்கள் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுக்கு உள்ளன. இந்த வசனங்களில் **விசுவாசமுள்ள ஜெபத்தின் வல்லமை** வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வளவு முக்கியமான வேதப்பகுதியைக் குறித்து தியானிக்கும்போது வேதாமத்தில் உள்ள இந்த வசனங்களில் எந்த மாற்றமும் சேதமும் நம்மால் செய்யப்படக்கூடாது. நாம் அவற்றில் கண்ட சத்தியங்களை அப்படியே எழுதியபடியே ஏற்றுக்கொண்டு அவற்றை அப்படியே விசுவாசித்து நாம் எப்படி செயல்படவேண்டும் என்று இதில் கூறப்ப்ட்டிக்கிறதோ, அதன்படியே கிரியையிலும் செய்ய வேண்டும்.

தேவனுடைய வார்த்தையை ஏற்று உபயோகிப்பதில் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தும்போது ஆங்கில மொழிப்பெயர்ப்பில் உள்ள ஒரு குறைப்பாட்டையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இப்பகுதி **கிரேக்க** மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. பொதுவாக **ஆங்கில** மொழிபெயர்ப்பை பார்த்தால் மூலமொழியில் உள்ள **நுட்பமான உட்கருத்துக்ள் ஆங்கிலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதில்லை.** ஆங்கிலத்திலும் நல்ல மொழிபெயர்ப்புகள் உள்ளன. எனினும் இந்த குறிப்பிட்ட வசனங்களின் **மூல கருத்தையும்** தெரிந்துகொள்ளும்படியாக **மூலமொழி** வசனங்களுடன் **ஆங்கிலமொழி**பெயர்புகளை **ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்ய வேண்டியது** அவசியம். இந்த கருத்தை மனதில் கொண்டு இந்த பகுதியின் **முதல் வசனத்தை** முதலில் ஆராய்வோம்.

**"உங்களில் ஒருவன் வியாதிபட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக: அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே, அவனுக்கு என்னை பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்".**

இந்த வசனத்தில் நான்கு அம்சங்கள் உள்ளன.

1. **வியாதிப்பட்டவன் மூப்பர்களை அழைக்கவேண்டும்.**
2. **மூப்பர்கள் வந்து அவனுக்காக ஜெபம் பண்ண வேண்டும்.**
3. **மூப்பர்கள் வியாதிப்பட்டவன் மேல் எண்ணெய் பூச வேண்டும்.**
4. **இவையெல்லாம் கர்த்தருடைய நாமத்தினாலேயே செய்யப்படவேண்டும்.**

இந்த ஒவ்வொரு பகுதியையும் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்வோம்.

**1. வியாதிப்பட்டவன் மூப்பர்களை வரவழைக்க வேண்டும் ?**

இந்த வேத பகுதிக்குத் சிலர் **தவறான விளக்கம்** கொடுத்து, **தவறாகப் புரிந்துகொண்டு** செயல்படுகிறார்கள். இந்த வசனத்தில் **ஜெபத்தில் குணமாக்கும் ஊழியம் நடத்தும் கூட்டங்கள்** குறிப்பிடவில்லை என்பதை கவனிக்க வேண்டும். சில பெரிய **எழுப்புதல் கூட்டங்களில்** பிணியாளர்களை **முன் வரச்செய்து** அத்தனை பெரிய கூட்டத்தினரின் முன்பாகவும் அவர்களுக்காகவும் **வேண்டுதல் செய்கின்றனர்.** ஆனால் இந்த குறிப்பிட்ட வசனம் இப்படிச் செய்ய தூண்டவில்லை.

**இந்த வசனம் கூறுவது,** ஒருவன் **வியாதிப்பட்டால்** சபையின் **மூப்பர்களை** அல்லது **போதகரை** அல்லது **ஜெபிக்கும் தேவதாசர்களைத்** தன் வீட்டுக்கு அழைக்கவேண்டும் என்பதே. அவர்கள் **இவனுடைய படுக்கையின் அருகில்** வரவேண்டும். **கத்தோலிக்கர்களில்** யாராவது **மரணப்படுக்கையில்** இருந்தால் பாதிரியார் வீட்டுக்கு வந்து அவனருகில் நின்று **சில சடங்குகளும்** அபிஷேகமும் செய்து அவனுடைய **கை கால்களில்** எண்ணெய் பூசி ஜெபம் செய்செய்வார்கள். இந்த வசனம் இப்படிப்பட்ட வழக்கத்தை குறிப்பிடவில்லை. யாக்கோபு 5:14ம் வசனம் **படுக்கையிலிருக்கும் வியாதியஸ்தன் குணமடைந்து எழுந்திருக்கவேண்டும்** என்பதற்குதான ஜெபிக்கும்படி **மூப்பர்களை** அழைத்தாரேயன்றி, **மரணத்துக்கு ஆயத்தப்படுவதற்காக** அல்ல.

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. **ஒருவன் வியாதிப்பட்டால்** அவன் தனக்கு மருந்து தந்து வியாதியைக் குணமாக்க **ஒரு டாக்டரைத்தானே அழைக்க வேண்டும்.** ஏன் **மூப்பர்களை** அழைக்கிறான்? அக்காலத்திலும் வைத்தியர்கள் இருந்தார்கள் **லூக்கா** இப்படி ஒரு வைத்தியன்தான். இவன் அப்போஸ்தலனாகிய பவுலுடன் ஊழியஞ்செய்ய செல்லும்போது அவன் தன்னுடைய **மருத்துவ அறிவைச் செயல்படுத்தி** ஊழியம் செய்தான் என்று எங்கும் எழுதப்படவில்லை.

**மூப்பர்களை** அழைத்ததற்கு காரணம் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் **வியாதி பாவத்தினால் வந்தது என்பதால்தான்** அங்குள்ள விசுவாசிகளின் கூட்டத்தின் ஆவிக்குரிய தலைவர்கள் இந்த மூப்பர்களே. எனவே இப்படிப்பட்ட காரியங்களுக்கு **வைத்தியர்** அல்ல. **மூப்பர்கள்தான்** அழைக்கப்படவேண்டும். **மூப்பர்கள்தான்** இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வந்து **ஜெபித்து** தங்கள் மனம்போல் வாழ்ந்து, **பாவம் செய்து**, அதனால் **வியாதிப்பட்டு** தவிக்கிறவர்களை நல்வழிப்படுத்துவது **சபை மூப்பர்களின் பணியே.** சபை மூப்பர்கள், சபை அங்கினத்தினர்களை பற்றி அறிவார்கள்.

**மூப்பர்கள் வியாதியஸ்தனுக்காக ஜெபிக்க வேண்டும்.**

யாக். 5:14ம் வசனத்தில் வியாதியஸ்தன் ஜெபம்பண்ணினதாகக் குறிப்பிடவில்லை, அவன் தான் சுகம் பெறுவதற்காக ஜெபிக்கும்படி தன் சபை **மூப்பர்களை** அழைக்கவேண்டும் என்று நினைப்பானானால் அவனுக்கு ஜெபத்தில் **நம்பிக்கை உண்டு.** அவனும் தன்னுடைய **வியாதிக்காக ஜெபித்திருப்பான்.** இந்த வனத்தில் மூப்பர்கள் மட்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் **சபை மூப்பர்கள் அந்த வியாதிஸ்தனுக்காக ஜெபிக்கட்டும்** என்று பொருள்.

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது மூப்பர்கள் சிந்திக்கவேண்டிய காரியங்களை இந்த வசனத்தின் நான்காம் அம்சத்தைப்பற்றி சிந்திக்கும்போது கவனிக்க வேண்டியது. **கர்த்தருடைய நாமத்தினாலே** செய்யப்பட வேண்டும் என்பதாகும்,

**எண்ணெய் பூச வேண்டும்**

யாக்கோபு **மூப்பர்கள்** வந்து **எண்ணெய் பூசி** வியாதிப்பட்டவனுக்காக **ஜெபிப்பார்கள்** என்று எழுதியபோது, யாருக்காக இந்த நிரூபத்தை எழுதினாரோ, அவர்கள் பழைய ஏறபாட்டின் இந்தப் பழக்கத்தை புரிந்துகொள்வார்கள் என்று நம்பினார்.

**வேதாகமத்தில்** உள்ள ஒவ்வொரு புஸ்தகமும் **ஒவ்வொரு காலத்திலும்** வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மை தரக்கூடியது. எனென்றால் அவை **பரிசுத்த ஆவியால்** தூண்டப்பெற்று கர்த்தருடைய **தாசர்களால்** எழுதப்பட்டது. ஆனால் சில **தனிப்பட்ட புஸ்தகங்கள்** முதலில் எழுதப்பட்டபோது அவை குறிப்பிட்ட சில **தனி நபர்களுக்காக** அல்லது **குழுவினருக்காக எழுதப்பட்டது** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யாக்கோபின் நிரூபத்தின் முதல் அதிகாரத்தின் முதல் வசனத்தில் அது யாருக்காக எழுதப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. **சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும்** என்று அந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். இதிலிருந்து **யாக்கோபு** இந்த நிருபத்தை **யூதர்களுக்காக** எழுதினான் என்று அறிகிறோம்.

**யூதர்களுக்காக** எழுதியதால் **எண்ணெய் பூசுதல்** குறித்து விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. ஏனென்றால் இது சாதாரணமாக **யூதர்கள் எல்லோருக்கும்** தெரிந்த ஒரு பழக்கம், யாக்கோபு புற ஜாதியாரான மக்களுக்கு இதைப்பற்றி எழுதியிருந்தாரேயானால், அவர்களுக்கு எண்ணெய் பூசும் பழகத்தை குறித்து ஒன்றும் தெரியாததால் எண்ணெய் பூசும்முன் விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியமாக இருந்திருக்கும்.

மேலும் புதிய ஏற்பாட்டில் **எண்ணெய் பூசுதல்** என்பது **வேறு இரண்டுஇடங்களில்** மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநேகம் **பிசாசுகளை** துரத்தி, அநேகம் **நோயாளிகளை எண்ணெய் பூசி** சொஸ்தமாக்கினார்கள். (மாற்கு 6:13) இந்தச் சூழ்நிலை– இயேசு தம் 12 **அப்போஸ்தலர்களை** நற்செய்தி அறிவிப்பதற்காக அனுப்பிய நேரம் அகும். அவர்களால் செய்யப்பட்ட காரியங்களைக் குறிப்பிடும்போது இது வருகிறது.

இதே நிகழ்ச்சியை **மத்தேயு நற்செய்தி** நூலிலும் காண்கிறோம். அதிகாரம் 10ல் அப்போஸ்தலர்களும் இஸ்ரவேல் மக்களாகிய யூதர்களிடம் மட்டும் போய் எல்லா ஊழியங்களையும் செய்யும்படி அனுப்பினார். மாற் 6:13ல் 12 அப்போஸ்தலர்களும் **பிணியாளிக்ளுக்கு எண்ணெய் பூசி வியாதாகளை சொஸ்தமாக்கினார்கள்** என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்து **புதிய ஏற்பாட்டுப்பகுதியில்** லூக்கா 7:46 நீ என் தலையில் **எண்ணெய் பூசவில்லை**. இவளோ என் பாதங்களில் **பரிமள தைலம்** பூசினாள். – இது இயேசு சீமோனிடம் கூறியது.

**எணணெய் பூசுதல்** புதியஏற்பாட்டில் மூன்று இடங்கிளில் மட்டம் கூறப்பட்டுள்ளது. அவை

1.) மாற்கு 6:3  2) லூக்கா 7:46  3) யாக் 5:14.

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் **புற ஜாதியாருக்கென்று** எழுதப்பட்ட புத்தகங்களில் **எண்ணெய பூசுதல்**பற்றி குறிப்பிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் அவர்களுக்கு இந்த எண்ணெய் பூசும் பழக்கம் **அறிமுகமானதல்ல.**

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் **எண்ணெய் பூசுதல்** ஒரு மருத்துவ முறை என்று எல்லாராலும் அறியப்பட்டிருந்தது. **நல்ல சமாரியன்** உவமையில் **காயம்பட்டவனின்** காயங்களில் நல்ல சமாரியன்

**எண்ணெயும் திராட்சை ரசமும்** வார்த்து காயம் கட்டியதாகக் காண்கிறோம். லூக்கா. 10:30-37ல் உள்ள இந்த உவமையில் ஒரு வழிப்பிராணி கள்ளர் கையில் அகப்பட்டு பொருட்கள் திருடப்பட்டு, அடிக்கப்பட்டுக் **காயப்பட்டவனாய்** ரோட்டருகே கிடக்கையில் அவ்வழியே வந்து அவனைக் கண்டும், அவனுக்கு உதவி செய்யாமல் கடந்து சென்றவர்களைப் பற்றி இயேசு பேசினார். எனினும் ஒரு **சமாரியன்** அவனைக்கண்டு அவன்மேல் மனதுருகி, தன் வாகனத்திலிருந்து இறங்கிக் கிட்டவந்து அவனை தூக்கி, காயங்களை துடைத்து, தாகத்தைத் தீர்த்து, **காயங்களில் எண்ணெயும்** திராட்ரசமும் வார்த்து காயம் கட்டி உதவி செய்தவனைப்பற்றிப்பேசுகிறார் இயேசு (வச. 34)

அந்த நல்ல சமாரியனிடம் **முதலுதவிப்பெட்டி இருந்தது.** அவன் அந்த மனிதனுடைய காயங்களில் எண்ணெயும் **திராட்சரசமும் வார்த்தான். திராட்ச ரசத்திலுள்ள மருத்துவ குணம்** கிருமி **நாசினியாகக்** கிரியை செய்தது. (ஒலிவ) **எண்ணெய்** காயத்தை ஆற்றும் மருந்தாகச் செயல்பட்டது. புதிய ஏற்பாட்டுக்காலத்தில் அநேக மருத்துகளின் மூலப்பொருளாக **ஒலிவ எண்ணெய்** பயன்படுத்தபபட்டது.

**காயங்களுக்கு** மருந்தாக **எண்ணெயைப்** பயன்படுத்துதல் பழைய ஏற்பாட்டுகாலத்திலும் இருந்தது. இஸ்ரவேல் தேசம் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலெல்லாம் காயம் பட்ட ஒரு மனிதனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை, அது காயமும் வீக்கமும், நொதிக்கிற இரணமுள்ளது. அது சீழ் பிதுக்கப்படாமலும் கட்டப்படாமலும் **எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது.** (ஏசா. 1:6) காயங்களை ஆற்ற எண்ணெய் பயன்படுத்தபபட்டது என்று அங்கு காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் **அபிஷேகம்** என்பதை குறிக்க **இரண்டு கிரேக்க** மொழிச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவை **கிரையோ அலெய்போ** எனபன. **கிரையோ** என்னும் சொல் வழக்கமான **அபிஷேகத்தைக்** குறிக்கும் **கிறிஸ்து** என்னும் பெயர் இதிலிருந்துதான் வந்திருக்க வேண்டும். இதன் பொருள் **அபிஷேகம் பண்ணப்பட்டவர்.**

இரண்டாவது சொல் **அலெய்போ** என்பது **தேய்த்தல் பூசுதல்** என்னும் பொருளை மட்டும் தருகிறது.

புதிய ஏற்பாட்டுகாலத்தில் கிரேக்க மொழியில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர் இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நீங்கள் மிகவும் **கவனமாக பூச வேண்டும்.** யாக் 5:14ல் கூறப்பட்டிருப்பதை **எண்ணெயினால் எண்ணெய் பூசுதல்** என்று கூறலாம்.

**அபிஷேகம் செய்தல்** என்னும் வழக்கமான பொருளுடன் யாக்கோபு இந்த வசனத்தை எழுதவில்லை. சாதாரணமாக காயங்களுக்குச் சிகிச்சையளிக்கும்போது **பூசுதல்** என்னும் பொருளுடன்தான்எழுதினார். யாக்கோபு பயன்படுத்தி ய சொல் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உள்ள **மருத்துவ மொழியில்** காணப்படுகிறது. அந்த **எண்ணெயே** ஒரு குணமாக்கும் **மருந்தாகும்.** எனவே அக்காலத்தில் மிகவும் பிரபலமாய் இருந்த **மருத்துவ முறையை** குறிப்பிட்டு **யாக்கோபு** எழுதினான் என்று அறிகிறோம். **எண்ணெய்** பூசுதல் அதோடு **ஜெபித்தல்**

**எண்ணெய்** பூசுதலோடு **ஜெபிக்கவும்** வேண்டும். இதுதான் முதலில் செய்யப்படவேண்டும். **எண்ணெய்** பூசப்பட்ட வியாதியஸ்தனுக்காக **மூப்பர்கள் ஜெபிக்க** வேண்டும். (வச. 14)

சிலர் இந்தச் சம்பவத்திலிருந்து **தெய்வீகக் குணமாக்குதலை** கூறுகின்றனர். ஆனால் இந்த வசனம் அந்த கருத்தை ஆதரிக்கவில்லை, எண்ணெய் ஒரு மருந்து. அது அக்காலத்தில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கும் எண்ணெய் பூசி ஜெபிக்க வேண்டும். எனவே இங்கு மருத்தவ சிகிச்சையும் செய்யப்பட்டு , அதோடு ஜெபக்கவும் வேண்டும் என்று காண்கிறோம். **அந்த மூப்பர்கள்** மருத்தினால் குணமாவதில் **பூரண நம்பிக்கை** வைக்கவில்லை. **தேவனுடைய கிருபையும்,** வல்லமையும் **அங்கு செயல்பட வேண்டும்** என்று விசுவாசித்தான்.

யாக்கோபு 5:14 **ஜெபத்துக்கும் மருந்துக்கும்** உள்ள உறவை வலியுறுத்துகிறது. மக்கள் நடப்பிலிருக்கும் **சிகிச்சை முறைகளையும் மருந்துகளையும்** புறக்கணித்துவிட்டு **ஜெபிக்கமட்டும் செய்யவேண்டும்** என்பது **கடவுளின் நோக்கமல்ல.** அதே வேளையில் விசுவாசி **மருந்தை உட்கொள்ள வேண்டாம்** என்று போதிக்கவில்லை,

**வியாதி** வந்தால் நடைமுறையில் இருக்கும் **மருத்துவ உதவிகளைப்பெற்று** மருந்துகளையும் உடகொள்ளவேண்டும். அதே வேளையில் **குணமாக்கும்படி** ஆண்டவரிடம் ஜெபிக்கவும் வேண்டும். அவனுடைய நம்பிக்கை மருந்தில் மட்டும் அல்ல. **ஆண்டவரிடத்திலேயே** இருக்க வேண்டும்.

இந்த வசனம் **மருத்துவ ஊழியத்துக்கு** ஒரு அடிப்படை **ஆதாரமாய் இருக்கிறது.** அறியப்பட்டிருக்கிற **மருத்துவ சிகிச்சைகள்** வியாதிப்பட்டவனுக்கு கொடுக்கப்பட வேண்டும், அதன்பின் **ஜெபிக்க வேண்டும்,** அப்பொழுது தேவன் அந்த நபரில் **கிரியை செய்வார்,** அவர் **வியாதியை குணமாக்குவார்.** சுகம் தருவார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவின் அப்போஸ்தலர்களுக்கும், இயேசுவின் நாமத்தில எண்ணற்ற வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார்கள். அவர்கள் **எந்த மருந்தையும்** பயன்படுத்தவில்லை, இது ஒரு அற்புதம் இதைச்செய்ய தேவனால் முடியும். **இது இன்னும் நடைபெறுகிறது**. தேவன் சுகம் கொடுக்க சித்தங்கொண்டால், தம் வல்லமையால் அந்த **நொடியிலேயே** சுகத்தை கொடுப்பார்.

மருத்துவ முறைகளையும் **மருந்துகளையும் வியாதியஸ்தர்களுக்கும்** பயன்படுத்துதல் **தேவனுடைய சித்தத்துக்கு எதிரானதல்ல** என்று யாக்கோபு 5:14 காட்டுகிறது. **தேவனுடைய கிருபையில்லாமல்** மருந்துகள் ஒருவேளைக் **குணமாக்குவிதில்லை. வியாதிகள் குணமாவது முழுவதும் கடவுளின் செயலே.** ஒருவனுடைய உடலில் தேவன்அமைத்திருக்கும் தத்துவங்களால் இயற்கையாகவே குணமாகுதல் நடந்தாலும் சரி. அல்லது இயற்கைக்கு மாறாக மனிதனுடைய உடலில மாறுல்கள் ஏற்பட்டாலும் சரி. **எல்லாம் கடவுள் செயலே.**

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சுகவீனமடைந்த விசுவாசிகள் அனைவரும் சுகம்பெற்றுவிட்ட்ார்களா? என்று அதிசயப்பதுண்டு **அவர்களில் எல்லோரும் குணமடையவில்லை.** விசுவாசிகள் மத்தியில் வியாதி வந்தால் அவர்கள் சுகமடைந்துவிடுவார்களானால் விசுவாசிகள் மத்தியில் மரணமே வராதே . எனினும் மரணம் பாவத்தின் பலனாய் வருகறிது. ஆதாமிடமிருந்து பெற்ற பாவத் தன்மையால் ஒவ்வொருவருக்கும் மரணம் ஏற்படுகிறது. இந்தப் பாவத்தின்தன்மையைக் குறித்து ரோமர் 5:12ல் பவல் இப்படிக் கூறுகிறார். இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே **மரணமும்** உலகத்திலே பிரவேசித்தது போலவும் எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று.

வேதாகமம் குறிப்பிடுவது. இயேசுவால் உயிர்த்தெழச்செய்யப்பட்ட **லாசரும்** உலகில் இன்னும் சிலகாலம் வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் அடக்கம் செய்யப்பட்டான். எனவே விசுவாசிகளுக்கு வியாதி வரும்போதெல்லாம் அவர்கள் **குணமாக்கப்படுவதில்லை,**

## படித்ததில் பிடித்தது...

**குடும்ப நல வழக்குகளைக் கையாண்ட உச்ச நீதி மன்ற நீதிபதிகள்**
வழங்கும் **முக்கிய பத்து கட்டளைகள்** (ஆலோசனைகள்)

1. உங்கள் மகன் மற்றும் மருமளை உங்களோடு ஒரே வீட்டில் இருக்க நிர்பந்திக்க வேண்டாம். ஒரு வாடகை வீட்டிலாவது தனியாக குடியிருக்கச் செய்யுங்கள். தங்களுக்கென்று ஒரு குடியிருப்பை தேடிக் கொள்வதற்கு அவர்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. உங்களுக்கும் உங்கள் **பிள்ளைகளுக்கும்** எவ்வளவு இடைவெளி ஏற்படுத்துகிறீர்ளோ அவ்வளவு பிரச்சனைகள் உங்கள் **மருமக்களோடு** தவிர்க்கலாம்.
2. உங்கள் **மருமகளை** உங்கள் மகள் போல பார்த்துக்கொள்ள வேண்டாம். உங்கள் **மகனின் மனைவியாவே** நினைத்துக்கொள்ளுங்கள். அல்லது **அவளை** ஒரு **தோழியாக** பாருங்கள். **உங்கள் மகன்** உங்களுக்கு கீழ்பட்டவன் என்று நினைப்பது போல் **அவன் மனைவியும்** உங்களுக்கு கீழ்பட்டவள் என்று நினைத்து **திட்டி விடாதீர்கள்.** ஏனென்றால் அவள் காலத்திற்கும் **அதை நினைவில் வைத்திருப்பாள்.** தன்னை திட்டுவதற்கும் .சரிப்படுத்துவதற்கும் **தன்னுடைய தாயாருக்கே** அன்றி **வேறொரவருக்கும் உரிமையில்லை** என்று எண்ணுவாள்.
3. உங்கள் மகனின் மனைவி எப்படிப்பட்ட பழக்கவழக்கம் மற்றும் குணமுடையவராயிருந்தாலும் **அது உங்களை பாதிக்க வேண்டாம்.** அது முற்றிலும் **உங்கள் மகனின் பிரச்சனை.** உங்கள் மகன் முதிர்ந்தவனாகவும் மனப்பக்குவமுள்ளவனாகவும் இருப்பதால் இதை உங்கள் பிரச்சனையாக எடுத்துக்கொள்ளவேண்டாம்.
4. சில சமயம் கூட்டாக வாழும் போது வீட்டு வேலைகளை குறித்த தெளிவுப்படுத்திக்கொள்ளுங்கள். மாமியாராகிய **நீங்கள்** அவர்கள் **துணிகளைத்** துவைப்பதற்கும் அவர்கள் **குழந்தைகளுக்கு தொட்டில்** கட்டுவதற்கும் **எந்த அவசியமும் இல்லை.** உங்கள் **மருமகள்** உங்களிடம் **உதவி கேட்டால்** அதுவும் **உங்களால் முடிந்தால்** செய்து கொடுங்கள். பதிலுக்கு **எந்த நன்றியையும்** எதிர்பாராதிருங்கள். மேலும் **உங்கள் மகனின் குடும்பத்தைக்** குறித்து **நீங்கள் கவலைப்பட வேண்டாம்.** அவர்கள் பிரச்சனைகளை **அவர்களே தீரத்துக்கொள்வார்கள்.**
5. உங்கள் **மகன்** மற்றும் **மருமகள்** சண்டையிடும்போது **காது கேளாதோர் போல்** இருந்து கொள்ளுங்கள். **இளம் தம்பதியர்** தங்கள் பிரச்சனைகளில் **பெற்றோர் தலையிடுவதை** விரும்புதில்லை.
6. **உங்கள் பேரக்குழந்தைகள்** உங்கள் **குழந்தைகள் அல்ல** என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். **குழந்தைகளை எவ்விதம் வளர்க்க வேண்டும்** என்பது **உங்கள் பிள்ளைகளை பொறுத்தது.** நற்பெயரோ **அவப்பெயரோ** அது உங்கள் **பிளளைகளையே சாரும்.**
7. **உங்கள் மருமகள்** உங்களை கவனிக்வும் நேசிக்கவும் **அவசியமில்லை.** அது **உங்கள் மகனின் கடமை.** இதை **உங்கள் மகனுக்கு** நீங்கள் புரிய **வைத்திருப்பீர்களானால்** உங்களுக்கும் **உங்கள் மருமகளுக்கும் நல்ல உறவு அமையும்.**

8. நீங்கள் **பணி ஓய்வு பெற்றபின்** உங்கள் பிள்ளைகளை் **சார்ந்துகொள்ளாதீர்கள்.** உங்கள் காரியங்களை **நீங்களே பாரத்துக்கொள்ளுங்கள்.** உங்கள் வாழ்வில் நீங்கள் கடந்து வந்த பாதைகளை **தனியே சமாளித்த** உங்களால் இனி வரும் காலத்தையும் பாரத்துக்கொள்ளமுடியும். இன்னும் புதிய அனுபவங்கள் உங்களுக்காக காத்துக்கொண்டிருக்கும்.

9. உங்கள் பணி ஓய்வு காலததில் சந்தோஷமாக வாழுங்கள். **நீங்கள் சம்பாதித்த** உங்கள் பணத்தை **உங்கள் நலனுக்காக செலவு செய்யுங்கள்.** உங்கள் **மகனிடம் பணத்தைக்கொடுத்து ஏமாந்து விட வேண்டாம்.** இறுதியில் உங்கள் பணம் உங்களுக்கு **பயனில்லாமல் போவதற்கு** வாய்ப்பு உள்ளது.

10 உங்கள் **பேரக்குழந்தகள் உங்கள் சொத்தல்ல.** அது **உங்கள் பிள்ளைகளின் விலையேறப்பெற்ற பரிசு** என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

குறிப்பு :

இந்த பத்துக் கட்டளைகள் நீங்கள் வாசிப்பதற்கு மட்டுமல்ல. உங்கள் நண்பர்கள், சொந்தங்கள், பெற்றோர்கள். பிள்ளைகள், கணவன் மற்றும மனைவி எல்லோருக்கும் பகிருங்கள்... எல்லாரும் வாழ்வில் அமைதியும் முன்னேற்றமும் பெறுவதற்கான வாழ்க்கைப் பாடமே இவைகள்.

## அழகு குறிப்புகள்

1. தினமும் உங்கள் **இருதயத்தை,** மனந்திரும்புதலினால் **சுத்திகரித்துக்கொள்ளுங்கள்.**
2. சுகமான **குளியல்** வெறும் நீரில் அல்ல, **தேவனின் வார்த்தையில்** மூழ்கி குளித்திருங்கள்.
3. **சுருக்கங்கள்** வராமல் இருக்க **மன்னிப்பை** உபயோகப்படுத்திப் பாருங்கள்.
4. **ஈரப்பதத்தை** குறையாமல் தக்கவைத்துக்கொள்ள **ஜெபமே** சிறந்த காரணி.
5. **அன்பெனும்** இனிமையான **வாசனை திரவியத்தை** சற்று உங்கள்மேல் தெளித்துக்கொள்ளுங்கள்.
6. இன்னமும் **உங்கள் அழகை** மெருகூட்ட **பொறுமையை** சற்று அதிக அளவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.
7. **கவலையும்,** கோபமுமே **வியாதியின் அடித்தளங்கள்** என்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளுங்கள்.
8. வயதின் தாக்கத்தை குறைத்து என்றும் **இளமையாய்** உங்களை மிளிர வைக்க **விசுவாசமே** நல்ல மருந்து,
9. **உங்கள் முகம்** மிகச் சிறந்த பொழிவுடன் விளங்கிட எப்போதும் ஓர் **புன் நகையை** அணிந்துகொள்ளுங்கள்.

*தொகுப்பு :* திருமதி **பமிலா ஜெயசந்திரன்,** (திருச்சி)

# நீதிமன்றம், நீதிபதிகள்.....
# .....லஞ்ஜமும் ஊழல்களும்

## இந்திய மக்களின் கடைசி நம்பிக்கையான நீதிமன்றங்களின் சாகும் நிலை

சமீபத்தில் வெளிவந்த தினசரி தாள்களில் நம் இந்திய மக்களின் முழு நம்பிக்கையையும் இழக்கும் பயங்கர செய்தி வெளியானது.

### உயர் நீதிபதிமேல் வஞ்ஜம் வங்கியதாக வழக்கு

தமிழ் நாட்டின் **உயர்நீதிமன்ற நீதிபதி** ஒருவர்மேல் **லஞ்ஜ ஒழிப்பு வழக்கு** தொடருவதற்கு உச்சநீதிமன்றம்தான் அனுமதி வழங்கவேண்டும். உச்ச நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் எந்த நீதிபதி மேலும் வழக்குபோட முடியாது. ஆகவே உச்சநீதி மன்ற அனுமதி கோரப்பட்டது. அந்த குறிப்பிட்ட நீதிபதிமேல் உள்ள லஞ்ஜ குற்றச்சாட்டுக்கு தகுந்த ஆதாரங்கள் இருந்ததால் உச்ச நீதிமன்றம் வழக்கு தொடரஅனுமதியளித்தது. அதை தொடர்ந்து **நீதிபதி** பதவியிலிருந்து தள்ளிவைக்கப்பட்டார்.



**உச்ச நீதிமன்ற உத்தரவு** கிடைத்தவுடன் **ஊழல் தடுப்பு அதிகாரிகள்** அந்த நீதிபதியின் **வீட்டையும்** அவர் தொடர்புடைய இடங்களையும் சோதனையிட்டபோது **கோடிக்கணக்கான பணமும்**, தங்கமும், மற்ற சொத்து ஆவணங்களும் அவர் **லஞ்ஜம் பெற்றதற்கான ஆதாரமும்** கிடைத்தது.

இந்த சோதனைகள் நடந்து கொண்டிருக்கும்போதே உயர்நீதி மன்ற மற்ற நீதிபதிகளின் **வீடும்** அலுவலகங்களும் சோதனையிடப்பட்டன. அவர்களிடமிருந்து ஏராளமான ஆவனங்களும் தங்க ஆபரனங்களும் **பினாமி சொத்து** ஆதாரங்களும் கைப்பற்றப்பட்டன. இதை பத்திரிக்கையின் முலமாக விவரம் அறிந்த தமிழ்நாட்டு மக்கள் அதிர்ச்சியில் உரைந்துபோய் உள்ளனர்.

இனி எத்தனை **நீதிபதிகள்** அகப்படுவார்களோ, எத்தனை **நீதிபதிகள் நீக்கப்படுவார்களோ** தெரியவில்லை.

கடந்த வருடம் தான் உச்ச **நீதிமன்ற தலைமை நீதிபதி ராமஜென்ம பூமி வழக்கில்** கடைசி தீர்ப்பு கூறப்போவதாக இருந்தபோது அவர் மிகவும் நீதியுள்ளவர் என்றும் தீர்ப்பு நிச்சயம் காவி கட்சிகளும் **குறிப்பிட்ட இரண்டு பெரிய தலைகளும்** எதிர்பார்த்தபடி தீர்ப்பு இருக்காது என்று உச்ச நீதிமன்ற **வழக்கறிஞர்கள்** கூறிக்கொண்டிருந்த வேளையில் திடீரென்று ஒரு **பெண் தலைமை நீதிபதியின்மேல் பாலியல் வழக்கு** தொடுத்தபோது **நாடே அதிர்ச்சியில் வீழ்ந்தது.** அதை தொடர்ந்து என்ன கசமுசா நடந்ததோ தெரியவில்லை. **தீர்ப்பு கூற** சில நாட்களே இருந்த சமயம் **அந்த பெண்** தன் வழக்கை **வாபஸ் பெற்றாள்.** அந்த பெண் **ஏன் வாபஸ் பெற்றாள் ?** ஒரு **உச்ச நீதிமன்ற நீதிபதியின்மேல் பாலியல் வழக்கு** தொடுப்பது என்பது சாதாரண விஷயமா ? எத்தனை பெரிய அவமானம், **வழக்கு தொடுத்த பெண்** மீது உச்ச நீதிமன்றமே தானே அந்த வழக்கை கையிலெடுத்து அந்த என்று நாடே எதிர்பார்த்ததே . அந்த பெண்ணை சும்மா விடலாமா?

அவள் தொடுத்த பாலியல் செய்தியில் **உண்மை உண்டா** ? இல்லையா? என்பதை அறிந்து அவள் தவறாக **வழக்கு தொடுத்திருந்தாலும்** அது **உச்ச நீதிமன்றத்துக்கு** அவமானம் ஆகுமே?

இது **இந்திய தேசத்துக்கே** அவமானம் உண்டாக்கும் விஷயம் ஆயிற்றே, **ஊடகங்கள்** பத்திரிக்கைகள் குறிப்பாக Insvestigation Ternal என்று அழைத்துக்கொள்ளும் பல பத்திரிகைகளும் இந்த பெண் வழக்கு விஷயத்தில் மௌனமானதுதான் பெரும் சந்தேகத்தையும் கேள்விக்குறியை உண்டாக்குகிறது.

உண்மையில் **நீதிபதிகள் லஞ்சம் வாங்கி குற்றவாளிக்கு சாதகமான தீர்ப்பை அளித்து விடுதலை செய்ய** முடியுமா?

**நீதிபதிகள்** லஞ்சம் **வாங்குவார்களா?** என்ற கேள்விக்கு கடந்த பல வருடங்களுக்கு முன் வெளிவந்த பல்வேறு செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகளை தொடர்ந்து வாசித்துப்பாருங்கள். நம் நாடு எங்கு பயனிக்கிறது என்பது வளங்கும். நீதிமன்றத்தின் மீது வைத்த **நம்பிக்கை** இநதிய மக்களாகிய நாம் இழந்து நிற்கிறோமா? என்பது பெரும் கேள்விகுறியும் வரப்போகும் நாட்களில் நம் நாட்டு மக்களின் நம்பிக்கை நம் நாட்டு மக்களின் நிலை என்னவாகும் ? எனபதை யோசிக்கும் போது பயமாக இருக்கிதே.

இந்த சூழ்நிலையில் கர்த்தருடைய வருகை சீக்கிரம் வந்துவிட்டால் நலமாயிருக்கும் என்று இரட்சிக்கப்பட்டவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.



**செக்ஸ்** & **பணம்** விஷயத்தில் சில **நீதிபதிகளின்** நடத்தையோ மர்மமானதாக இருக்கிறது. பஞ்சப்ட ஹரியானா உயர்நீதிமன்ற **நீதிபதி நிர்மல் கௌர்** 2008 ஆகஸ்ட்டில் அவர் வீட்டுக்கு ஒருவர் வந்து லட்சும் ரூபாய் கரன்சி கட்டுகளைக் கொடுத்தார். கொடுத்தவர் **அட்வகேட் ஜெனரல் சஞ்சீவ் பன்சாலின் குமாஸ்தா. நிர்மல் கௌர்** போலீஸை கூப்பிட்டார். உடனே **பஞ்சாலும்** குமாஸ்தாவும் **இந்த பணத்தை** தவறாக இடம் மாறி நீதிபதி **நிர்மல் கௌர்** வீட்டுக்கு அனுப்பிவிட்டதாகவும் அது இன்னொரு **நீதிபதியான நிர்மல் யாதவ்** வீட்டுக்கு **போக வேண்டிய பணம்** என்று சொன்னார்கள். தனியே நிர்மல் யாதவ் வீட்டுக்கு பணத்தை அனுப்பி விட்டதாகவும் சொன்னார்கள். இதை அடுத்து **உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன்** மூவர் குழுவை நீதிபதி கோகலே தலைமையில் நியமித்து அந்த வழக்கினை விசாரிக்க செய்தார். விசானை அறிக்கையின் அடிப்படையில் நிர்மல் யாதவ் மீது நடவடிக்கை எடுக்க **முகாந்தரம் இருப்பதாக** முடிவு எடுத்து தெரிவித்தார். சி,பி,ஐ, நீதிபதி நிர்மல் யாதவ்வை விசாரிக்க ஆரம்பித்தது.

நீதிபதி நிர்மல் யாதவ் சொன்னார். பணம் நீதிபதி **நிர்மல் கௌருக்கானதுதான்.** அவர் வக்கீலாக இருந்த காலத்திலிருந்தே ஒரு **பஞ்சாப் உயர்நீதிமன்ற நீதிபதியுடன்** 20 வருடமாக **கள்ள உறவு** வைத்திருக்கிறார். இப்போது **உச்ச நீதிமன்ற நீதிபதியாகிவிட்ட** அவருடைய மனைவி இதைக் காட்டி கனவரைக் விவாகரத்து செய்து விட்டார். **15 லட்சம் ரூபாய்** நீதிபதி கௌரவ் வீட்டில் தரப்பட்ட போது உச்சநீதிமன்ற நீதிமன்ற **நீதிபதியும்** இன்னொரு **பஞ்சாப் நீதிபதியும்** இருந்தார்கள். இதையெல்லாம் விசாரிக்காமல் **என்னை மட்டும்** விசாரிப்பது தவறு என்றார்.

கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? நீதிபதி **நிர்மல் யாதவ்** மீது வழக்கை தொடர முடியாது. அதற்கு போதுமான முகாந்தரம் இல்லை. என்று **உச்சநீதிமன்ற நீதிபதி பாலகிருஷ்ணனும்** அமைச்சர் **மொய்லியும்** இதைப்பற்றி ஆராய்ந்து இந்த விவாதத்தில் முடிவு எடுக்கிறார்கள். எனவே **ஃபைல்**

**மூடப்படுகிறது** என்று சி.பி.ஐ. இந்த வருடம் டிசம்பர் 24ம் தேதி தெரிவிக்கிறார். மேற்படி பஞ்சாப் வழக்கில் நம் **கவனத்துக்குறியவர்கள் நீதிபதிகள் மட்டுமல்ல.** வக்கீல்களும்தான் 15 லட்ச **ரூபாய் பணத்தை** நீதிபதி வீட்டுக்கு **கொடுத்து அனுப்பியதாக ஒப்புக்கொண்டிருப்பவர் அடிஷனல் சாலிசிட்டர் ஜெனரல்** என்கிற உச்சமான **அரசு வழக்கறிஞர்** இரு **நீதிபதிகளிடையே கள்ள உறவு** இருப்பதாக சொன்ன குற்றச்சாட்டுதான் முக்கியமான அம்சம் ஆகும். அந்த **பெண் நீதிபதி** வக்கீலாக இருந்தபோதே **ஆண் நீதிபதியுடன்** உறவு வைத்திருந்தார். இவர் கேஸேல்லாம் **அவர் விசாரிப்பார். சாதகமான தீர்பளிப்பார்** என்பது குற்றசசாட்டுகளாகும்.

**வக்கீல்களுக்கும்** நீதிபதிகளுக்கும் இடையே இருக்கும் இந்த உறவு எப்படிப்பட்டது?. **பெருவாரியான வக்கீல்களும்,** பெருவாரியான **நீதிபதிகளும் நேர்மையானவர்கள்** என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. மீதி இருக்கும் சிலர் தான் மொத்த **நீதி துறையில்** நம்பக தன்மைக்கே உளை வைப்பார்கள்.

பஞ்சாப்பில் சி.பி.ஐ. **நீதிபதி விஷயத்தில்** பல்டி அடித்திருக்கிறது. சென்னையில் வக்கீல்கள் விஷயத்தில் என்ன செய்யப்போகிறது என்று பார்க்க வேண்டும். சென்ற வருட உயர்நீதிமன்ற வளாக ரகளையில் போலீஸார். வக்கீல்கள் இரு தரப்பும் **ஆராஜகம் செய்தார்கள்** என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இதுவரை நீதிபதிகள்தவறுசெய்த வக்கீல்கள் மீது **எந்த கடும் நடவடிக்கையும் அறிவிக்கவில்லை.** போலீஸ் மீது மட்டுமே க**டும் கண்டனங்களை** நிதிபதிகள் அறிவித்திருக்கிறார்கள். இப்போது சி.பி.ஐ. யின் குற்றப்பத்திரிகை **தெளிவாக வக்கீல்களையும்** மாட்டுகிறது. உடனே வக்கீல்களின் எதிர்ப்பு ஆரம்பமாகிவிட்டது. சி.பி. ஐ. **பல்டி அடிக்குமா** இல்லையா என்பதை சிலர் ஆராய்ந்ததில் ஃபல் குளோஸ் செய்யபபட்டது.

உயர் நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமனறம வரை ஊழல் புரையோடி கிடக்கிறது என டெல்லி ஹிந்தி பத்திரிகைஅறிக்கை வெளியிட்டிருக்கிறது.

CSI டையோசிஸ் வழக்கிலேயே பார்ததோமே ஒரு பெரிய CSI டையோசிஸ் எதிரும் – புதிருமான இரண்டு பெரும் தலைகள் கூட்டமாக நீதபதி வீட்டில் ஒரு பெரிய சூட்கேஸ்ஸோடு எதிர் எதிரே அமர்ந்திருக்கிறார்கள். நீதிபதி வருகிறார் உங்கள் யார் இந்த குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாக கொண்டு வந்திருக்கிறீர்களோ அவர்கள் மட்டும் நீதிபதி அறைக்கு அழைக்கப்பட்டார்.

தீர்ப்பு பணம் அதிகம் கொடுத்தவரக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. அவர்கள் நிர்வாக ஆட்சியில் அமர்ந்தார்கள்.

1½ மாதத்தில் மற்ற பார்ட்டி மிக மிக அதிக தொகையோடு டெல்லி உச்ச மன்றம் சென்று தங்களுக்கு சாதகமான தீர்ப்பை விலைக்கு வாங்கிவந்து ஆட்சி பீடம் ஏறிவிட்டனர்.

## வெரும் கவுரவ பிரச்சனை

எது எப்படியானாலும் **தீர்ப்புகள்** இப்படியா உயர்நீதி மன்றம் உச்ச நீதிமன்றங்களில விலை பேசப்படுகிறது. நீதிபதிகளாக பொறுப்பேடுக்கும்முன் எடுக்கும் சத்திய பிரமாணத்துக்கு ஒரு மரியாதை இல்லையா? பணம் இல்லாத ஏழைகள் தங்கள் வழக்குக்கு சரியான நியாயமான தீர்ப்பு எதிர்பார்க்க கூடாதா?

ஓய்வுபெற்ற நல்ல நீதிபதி ஒருவர் நீதி செத்துபோய் நீண்ட காலமாகிறது என்கிறார்.

# 2020ம் வருடத்தில் என் ஊழியங்கள்

| | | |
|---|---|---|
| January | 2-1-2020 to 5-1-2020 | Hill Tribe Ministry |
| | 17-1-2020 to 19-1-2020 | Pottalpatti C.S.I. Convention (Tirunelveli Dioces) |
| | | **MALAYSIA MINISTRY** |
| | 23-1-2020 to 31-1-2020 | PINANG Luthern Church Convention |
| February | 1-2-2020 to 2-2-2020 | KUALALUMBUR Union Convention |
| | 3-2-2020 to 5-2-2020 | SINGAPORE Prayer Fellowship |
| | | **THAILAND** |
| | 6-2-2020 to 8-2-2020 | PRESBITARIAN Church Meeting |
| | | **INDIA** |
| | 10-2-2020 to 15-2-2020 | Village Ministry Soranadu |
| | 21-2-2020 to 23-2-2020 | New life Christian Mission **Tanda** Tribal Church Meeting |
| | 28-2-2020 to 1-3-2020 | TDTA English Church Convention, Military Lane, Tirunelvelli |
| March | 04-3-2020 to 5-3-2020 | Tivandram (Kakkamoola Union Convention) |
| | 6-3-2020 to 8-3-2020 | C.S.I. St. Luck Church Convention, Tirupur |
| | 20-3-2020 to 22-3-2020 | C.S.I. Christ Church Convention, Coimbatore |
| | 24-3-2020 to 30-3-2020 | North India Meeting, Jarkhand & CNA Churches |
| April | 2-4-2020 to 5-4-2020 | Madurai Diocese St. Peters Church, Satchiapuram |
| | | **NORTH INDIA** |
| | 14-4-2020 to 24-4-2020 | C.N.I. Church, Odisa & Madhya Pradesh |
| May | 7-4-2020 to 10-4-2020 | Kanyakumary C.S.I. Diocese, **Devicode** C.S.I. Church Convention |
| | 13-4-2020 to 17-4-2020 | Tuticorin C.S.I. Diocese, Pragasapuram C.S.I. Convention |
| | 21-4-2020 to 24-4-2020 | Swayerpuram C.S.I. Convention |

# நீங்கள் எந்த ரகம்....

## மோசமான ஆண்டு

ஒரு மனிதர் ஆண்டின் இறுதியில் தன்னுடைய டைரியில் எழுதத் தொடங்கினார்.

இந்த வருடம் எனக்கு மிகுந்த துயரமான ஆண்டு. இந்த ஆண்டில்தான் எனக்கு ஆப்பரேஷன் நடந்தது. நான் நீண்ட காலம் படுக்கையில் இருக்க வேண்டி வந்தது.

எனக்கு 60 வயது நிறைவடைந்ததால் 30 ஆண்டுகளாக செய்துவந்த பணியிலிருந்து ஓய்வு பெற்றேன்.

இந்த ஆண்டில்தான் என் தந்தை மரணமடைந்தார், அது எனக்கு பெரிய துக்கத்தை கொடுத்தது, அதை தொடர்ந்து என் மகன் கார் விபத்தில் சிக்கி அதிக நாட்கள் ஆஸ்பத்திரில் கழிக்க வேண்டிவந்தது. ஆகவே என் வாழ்க்கையில் இந்த வருடம் எனக்கு மிகவும் மோசமான வருடம் ஆகும். என்று டைரியில் எழுதிவிட்டு படுக்கைக்கு சென்றார்.

சற்று நேரம் கழித்து அவர் மனைவி படுக்கை அறைக்கு வந்தாள் கணவரின் டைரியை படித்து விட்டு அதில் கடைசி வரியாக எழுதியிருந்த பாகத்தை படித்துவிட்டு அதன் அருகே மனைவி அந்த வருடத்தின் தன் அனுபவத்தை எழுதிவைத்தார்.

## நல்ல ஆண்டின் நிறைவான ஆண்டு

இந்த வருடம்தான் என்னை பொருத்தவரை நிறைவான நல்ல ஆண்டு.

பல ஆண்டுகளாக விலியில் என்னை வேதனைப்படுத்திய பித்தப்பை கல் பிரச்சனையிலிருந்து அறுவை சிகிச்சையின் மூலம் சுகம்பெற தேவன் கிருபை செய்தார். அந்த வேதனையிலிருந்து பெற்ற விடுதலை எத்தனை சுகம் நான் அனுபவித்தேன் என்பது எனக்கு மட்டும்தான் புரியும். அந்த சுகம் கடந்த மாதங்களில் அனுதிபவித்த அத்தனை வேதனைகளையும் மறக்க செய்தது.

என் வேலையிலிருந்து ஓய்வு பெரும்போது கடந்த 30 வருடங்கள் சிறப்பான வகையில் பணியாற்றி எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் நல்லவிதத்தில் ஓய்வு பெற செய்த தெய்வத்தையும் கடந்த காலங்களில் அவர் நடத்தியவிதத்தையும் நினைத்து கர்த்தரை துதிக்கிறேன்.

என் தகப்பனார் 95 வயதுவரை வாழ்ந்து சமீபத்தில்தான் மரித்தார். அவர் தன் மரணம் வரை யாருக்கும் எந்த கஷ்டத்தையும் கொடுக்காமல் யாருக்கும் பாரமாக இல்லாமல் தன் வேலைகளையெல்லாம் தானே செய்யும் அளவு கர்த்தர் என் அப்பாவுக்கு சுகமும் பெலமும் கொடுத்ததை நினைத்து துதிக்கிறேன். என் கணவர் டைரியில் எழுதியதுபோல் என் மகன் பெரிய கார் விபத்தில் சிக்கி கார்நெருங்கி போனாலும் மகன் உயிருக்கு ஆபத்து இல்லாமல் உடலிலும் பெரிய பாதிப்பு இல்லாமல் மகனை உயிரோடே நடக்கச்செய்தாரே அதை நினைத்து கர்த்தரை மனதார துதிக்கிறேன். என்று எழுதி வைத்தார்.


---

அன்பானவர்களே, மேலே வாசித்தது ஒரே குடும்பத்தின் தம்பதிகளான கணவன் –மனைவி குடும்பத்தில் நடந்த ஒரே மாதிரியான நிகழ்வுகளாகும். இதிலே ஆவிக்குரிய நபர் யார்? பெயர் கிறிஸ்தவ நபர் யார் என்று விளங்குகிறதா. இரண்டு பேர் அனுபவித்ததும் ஒரே பிரச்சனைதான் மனந்திரும்பி இரட்சிக்கபட்டவர்கள், பிரச்சனைகளின் மத்தியில் தங்கள் ஆவிக்குரிய அனுபவத்தை எப்படி வெளிப்படுத்துகிறார்கள் பாருங்கள்.

சரியானபடி மனம் திரும்பிய அனுபவம் மட்டும் நமக்கு கிடைத்தால் பிரச்சனை நிறைந்த உலகில் வியாதி, விபத்து, மரணம் ஆகியவற்றை சந்திக்காத குடும்பமே கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசுவை ருசித்தவர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதை மேலே வாசித்த தம்பதிகளில் வாழ்க்கையில் உள்ள வித்தியாசத்தை அறிந்து வாசகர்கள் வாழ்வீர்களாக. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிரு அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வலாராக. சங் 37:4.

# C.S.I. TIRUNELVELI DIOCESE

## CHETTIKULAM (செட்டிக்குளம்)



திருநெல்வேலி டையோசிஸில் **CSI** என்ற பழைய பெயரிலேயே இன்னும் இயங்கும் சில சபைகளில் ஒன்றுதான் **செட்டிக்குளம் CSI Church.** இங்கு நடந்த கன்வென்ஷன் சிறப்பாக அமைந்தது. **Rev. A.G.R. வேத நாயகம் சம்ராஜ்** அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# St. JACOBE C.S.I.Church TIRUNELVELLI DIOCESE

## யாக்கேபுபுரம்



யாக்கேபு புரம் என்ற ஊரில் நடந்த கூட்டமும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

# கன்னியாகுமரி டையோசிஸ்

## புதுகுடி C.S.I. சபை நாள் விழா கன்வென்ஷன்








நாகர்கோவில் பஸ் ஸ்டான்ட் அருகே உள்ள **புதுகுடி CSI** சபையில் சபைநாள் ஸ்தோத்திர கூட்டமாக 3 நாட்கள் கனவென்ஷன் நடத்தப்பட்டது. சபை ஆயர் **D. கிறிஸ்டோபர் பாபுராஜ்** அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தார். பெரு மழை நாட்கள் மழை தொடர்ந்து பெய்திருந்தது. ஆனாலும் சபை நிர்வாககள் தைரியமாக **ஆலய வளாகத்தில் வைத்து** கூட்ட ஏற்பாடுகளை செய்தருந்தனர். காரணம் மற்ற சபையினரும் தயக்கம் இல்லாமல் கர்த்தருடைய செய்தியை கேட்க வேண்டும் என்ற எண்ணத்தில் வெளி மைதானத்திலேயே கூட்டம் நடத்தப்பட்டது. **கர்த்தரின் கிருபையால்** 3 நாட்களும் கூட்ட நேரத்தில் மட்டும் கர்த்தர் மழையை கர்த்தர் கட்டுப்படுத்தி கூட்டங்கள் ஆசீர்வாதமாக முடிய உதவி செய்தார். ஏராளமான மக்கள் மனம் திரும்பவும், சுகம் பெறவும் கர்த்தர் அருள் புரிந்தார். கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.

# சென்னை
# தரிசன பெருவிழா

தரிசன பெரு விழா என்ற தலைப்பில் **FMPB** நண்பர் சுவிசேஷ ஜெபகுழுவினர் மிக பிரம்மாண்டமாக 3 நாட்கள் மாலை பொது கூட்டத்தை மைதானத்திலும் பகல் கூட்டத்தை ஆலயத்திலும் வைத்தார்கள். (சென்னை) பெரும்பாக்கம் **அட்வெண்ட் சர்ச்** ஆலயத்தில் வைத்தும் ஆலய வளாகத்தில் வைத்தும் கூட்டங்களை நடத்தினர். இக்கூட்டத்துக்கு ஒத்துழைப்பு அளித்து சிறப்பித்த **Rev. இம்மானுவேல்பக்த சிங்** அவர்களை பாராட்டுகிறேன். ஆயர் அவர்கள் சபை நிர்வாகிகளுடன் இணைந்து **மிஷனரி பாரத்துடன்** இந்த ஏற்பாட்டை செய்து உதவினர்.




**மேடவாக்கம் FMPB** ஜெபக்குழு தலைவர்கள் குறிப்பாக **Mr. கெர்ஷோம் சாமுவேல்** அவர்களும் ஜெப குழுவினரும் பெரும் செலவுகள் செய்து அயிரக்கணக்கானவர் செய்திகளை கேட்டு பயனடையவும், மிஷனரி பணியாற்றி அறியவும் இந்த சிறப்ப ஏற்பாடுகள் செய்தனர்.

இந்தியாவின் **மத்தியபிரதேச** மிஷனரி பணித்தளத் (சென்னை) **மேடவாக்கம்** ஜெப குழுவினர் தாங்குகிறார்கள். மத்திய பிரதேச பணிதளத்தில் ஊழியம் செய்யும் மிஷனரிகளை இநத ஜெபக் குழுவினர் சென்னைக்கு வரவழைத்து அவர்கள் மூலமாக உருவாக்கப்பட்ட பல்வேறு இடங்களில் **ஆதிவாசிகள்** ஆராதிக்கும் சபைகளின் பாஸ்டர்கள் **ஸ்வார்த்திக்** என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் **ஆதிவாசிகள்** ஆராதிக்கும் சபைகளிலிருந்தே **தெரிதெடுக்கப்பட்ட ஊழியர்கள் ஆகும்.** இவர்கள் அதிகம் படிப்பறிவு இல்லாதவர்களாகும். இவர்கள்தான் அங்குள்ள சபைகளை நடத்துகின்றனர். ஸ்வார்த்திக் என்ற பாஸ்டர்களையும் **ஆதிவாசி** சபை **அங்கத்தினர்கள்** சிலரையும் குடும்பமாக சென்னைக்கு வரவழைத்து நான் பேசிய இக்கூட்டங்களில் அவர்கள் கலந்துகொண்டு அவர்கள் மொழியில் இயற்றிய கிறிஸ்தவ கீதங்களை அவர்களுடைய வாத்திய கருவிகளாகிய டேலாக் – சலங்கு இவைகளை வைத்து துதிபாடல் பாடி அவர்கள் ஆராதித்ததை கண்டு பரலோகம் சந்தோஷப்படும். அந்த பாஸ்டர்களும் ஆதிவாசிகளும் கூறிய அவர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட சாட்சியும் ஜீவனுள்ளது, ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டது,

இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் அத்தனை **ஆதிவாசிகளையும்** மிஷனரி குடும்பத்தையும் சென்னையில் நான் தங்கிய அதே லாட்ஜில் **A/C அறைகளில்** அத்தனை குடும்பத்தையும் தங்வைத்தது FMPB,. IEM மிஷனரி கூடுகையில் இதுவரை நான் கேட்டிராத சம்பவமாகும். காடுகளிலும், **மரத்தடியிலும்,** குடிசையிலும், மலையிலும் வெய்யிலிலும் உறங்கி வாழ்ந்த அவர்கள் **ரயில் பயனத்தையும்** அனுபவித்ததில்லை. **வனத்திலிருந்த** அவர்கள் வெளி உலகை காணாதவர்கள். அந்த ஆதிவாசி மக்களுக்கு **A/C** அறையில் தங்க வைத்து **ஆதிவாசி** விசுவாசிகளை மிஷனரி **ஊழியர்களை** கௌரவித்து அழகுபார்த்தார்கள், அந்த ஜெப குழுவினர். அந்த **ஆதிவாசி** விசுவாசிகளை எந்த அளவு நேசிக்கிறார்கள். மிஷனரிகளை எந்த அளவு இவர்கள் கௌரவிக்கிறார்கள் என்பதற்கு நல்ல முன்மாதிரியாகும். இது தேவையற்ற **வீன் செலவு,** அந்த **பணத்தை** மிஷனரி ஊழிய தேவைகளுக்கு கொடுத்தால் மிக பிரயோஜனப்படுமே என்றும் கூறலாம். ஆனால் இது ஒவ்வொரு முறையும் நடக்கும் நிகழ்ச்சியல்லவே.

ஆனால் வாழ்க்கையில் காடுகளை, கிராமத்தை விட்டு வெளிவராத அந்த ஆதிவாசி விசுவாசிகளுக்கு இது புது அனுபவமாக இருந்திருக்கும். வசதியுள்ள பட்டணவாசிகள் வெய்யில் காலத்தில் அனுபவிக்கும் **A/c** அறையும், விலை உயர்ந்த படுக்கை **மெத்தையும்** அவர்கள் கற்பனைசெய்தும் பார்த்திருக்க மாட்டார்கள்.

உண்மையில் அவர்கள் பழக்கமில்லாத அந்த **A/C** அறையில் அந்த ஆதிவாசிகள் 3 நாட்களும் சரியாய் தூங்கியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். புது அனுபவம், கம்பளி போர்வை அறையில் உண்டு. ஆனாலும் **A/C** அறை அவர்களுக்கு பழக்கமில்லை, அவர்கள் இதை எப்போதும் அனுபவிக்க போகிறதில்லை. வாழ்க்கையில் ஒரே ஒரு முறையாவது **A/C** அறையில் படுப்பது அவர்களுக்கு புது அனுபவம் மட்டுமல்ல, அவர்களுக்கு அது மறக்க முடியாத ஆவிக்குரிய அனுபவமும் ஆகும். பணம் செலவானாலும் பரவாயில்லை என்று அந்த ஏழை மக்களை கௌரவித்த **மேடவாக்கம்** ஜெப குழுவினரை பாராட்டுகிறேன். ஒருவன் விக்கிரகத்தைவிட்டு, குடிப்பழக்கத்தைவிட்டு, விபச்சார பாவத்தைவிட்டு **கிறிஸ்துவின் பிள்ளையானால்** அவன் **காட்சிவாசியானாலும்** நாட்டுவாசியானாலும் கர்த்தர் அவர்களை உயர்த்துவது ஆசீர்வதிப்பது இவையெல்லாம் வித்தியாசமான அனுபவமாகும்.

☐ இதை எழுதுகிற **Dr. புஷ்பராஜ்** ஆகிய நான் இரட்சிக்கப்பட்டு மனம் திரும்பி வேத புத்தகத்தை கையில் எடுத்தபின்னர் டாக்டர் பணியைவிட **கிறிஸ்துக்காய் வாழ்வதும்** அவரை **அறிவிப்பதிலும்** உள்ள **ஆசீர்வாதம்** எத்தகையது என்பதை **அனுபவித்தவன் நான்.** அது மட்டுமல்ல **டாக்டர்** என்ற பட்டத்துக்கு கிடைக்காத சிறப்பு **ஊழியக்காரன்** என்று ஆகிவிட்டபின் **Dr.** புஷ்பராஜ் ஆகிய எனக்கு கிடைக்கும் **மரியாதையும்**, வரவேற்பும் மிக அதிகம். இந்தியாவிலோ – வெளிநாட்டிலோ எங்கானாலும் கர்த்தரை நேசிக்கிறவர்கள் என்னிடம் காண்பிக்கும் அன்பு **உபசரிப்பு** ஆகியவைகள் **சற்றும் தகுதி இல்லாதவனுக்கு** கிறிஸ்துவால் கிடைத்த மேன்மையாகும்.

அதைதான் அந்த ஆதிவாசிகள் சென்னையில் **FMPB** ஜெப குழு மூலமாக சென்னை மேடவாக்கம் ஜெயகுழுவினரால் அனுபவித்த உலக பிரகாரமான அனுபவமாகும். அவர்கள் கடைசிவரை விசுவாசம் மாறாமல் இருந்தால் இதைவிட பெரிய சுகத்தையும் ஆவிக்குரிய **பேரின்பத்தையும்** அடைவார்கள் என்பது நிச்சயம். இது அந்த ஆதிவாசிகளுக்கும் மட்டுமல்ல, இதை வாசிக்கிற ஜாமக்காரன் வாசகர்களுக்கும் உரியதாகும்.

**தேவனுடைய** ஆலோசனையில் ஒன்றையும் நான் **மறைத்து வைக்காமல்** எல்லாவற்றையும் (ஜாமக்காரன் வாசகர்களாகிய) உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்த பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றைய தினம் சாட்சிகளாக வைக்கிறேன். அப். 20:26,27

# ஜாமக்காரன் வாசகர்கள் யாவருக்கும் 2020 புதுவருட வாழ்த்துதலை நாங்கள் குடும்பமாய் அறிவிக்கிறோம்



நீங்கள் யாவரும் சமாதானத்துடன் வாழ்ந்து சுகமாகவும், கிறிஸ்துவுக்கு சாட்சியாயும் வாழ கர்த்தர் உங்கள் யாவருக்கும் அருள்புரிவாராக என்று மனமாற வாழ்த்துகிறோம்.

**JANUARY - 2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.